# தேன்மொழி

திங்கள் வெளியீடு

# தேன்மொழி இதழ்த் தொகுப்பு

தொகுப்பும் பதிப்பும்
தில்லைநாதன் கோபிநாத்
கலாமணி பரணீதரன்
நடராசா பிரபாகர்

ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOOLAHAM
FOUNDATION

# தேன்மொழி

## இதழ்த் தொகுப்பு

**தொகுப்பும் பதிப்பும்**
தில்லைநாதன் கோபிநாத்
கலாமணி பரணீதரன்
நடராசா பிரபாகர்

ஜீவநதி வெளியீடு 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்மொழி இதழ்த் தொகுப்பு

தொகுப்பும் பதிப்பும்
தில்லைநாதன் கோபிநாத்
கலாமணி பரணீதரன்
நடராசா பிரபாகர்
© வரதர் குடும்பம்
அட்டைப்பட வடிவமைப்பு
க.பரணீதரன்
வெளியீடு
நூலக நிறுவனம், ஜீவநதி
பக்கம்: 104
விலை : 300.00
அச்சுப்பதிப்பு:
பரணீ அச்சகம், நெல்லியடி.

ISBN: 978-955-0958-33-7

ஜீவநதி வெளியீடு - 139

NOOLAHAM
FOUNDATION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழில் சீராட்டி
செந்தாமரையாய் சிறப்பித்தார்
தெம்மாங்கு தாலாட்டி
"தேன்மொழி" யாய், தித்திப்பாய்
வித்திட்டவர் விண்ணகமெய்திட
விளைந்தவற்றை வேரூன்றிய
பொற்கரங்களின் பொலிவூட்டலால்
பெருமிதத்தோடு பேச வந்துள்ளாள்
தேன்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

வணக்கம்

மறுமலர்ச்சி எழுத்தாளர், ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் என்ற அடைமொழிகளுடன் அழைக்கப்பட்ட திரு. தி.ச.வரதராசன் அவர்கள் எமது தந்தை என்ற அறிமுகத்துடன் இந்த செய்தியை ஆரம்பிக்கிறேன்.

அப்பா, "வரதர்" என்ற புனைபெயரில் கதைகள், குறுநாவல்கள், கவிதைகள் என்பவற்றை படைத்தவர். அவரின் "வரதர் வெளியீடு" பல பாட புத்தகங்கள், நூல்கள், கவிதைகள், கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றை அவர்தாம் நிர்வகித்து வந்த ஆனந்தா அச்சகம் பதிப்பகத்தால் அச்சிட்டு வெளியிட்டார். அப்பாவின் சஞ்சிகைகள் பலவாறான நெருக்கடிகளை காலந்தோறும் சந்தித்து வந்துள்ளன: பேப்பர் கட்டுப்பாடு, அச்சிடும் கால அவகாசம், சந்தை வழி அடைப்பு, நாட்டு நிலைமை மேலும் பாரிய பொருளாதார நெருக்கடி போன்றவை எமது நினைவுகளில் நிற்பவை. ஆனாலும் அப்பாவின் முயற்சிகளுமோ, பீனிக்ஸ் பறவை போன்று இறக்கை முளைத்து, பறந்து கொண்டே இருந்தன. நிறுத்தப்படும் சஞ்சிகைகள், காலம் கனிந்ததும் மீண்டும் அதே போல் வெளிவரத் தொடங்கி விடும். இல்லையெனில் சமுதாய தேவைக்கேற்ப வேறு ஒரு கோணத்தில் மற்றொரு படைப்பு வெளிவரத் தொடங்கும். இந்த வகையில், 1955ம் ஆண்டில் எமது நாட்டின் படைப்பாக முதன் முதலில் கவிதைகளுக்கான சஞ்சிகையாக தேன்மொழி வெளிவந்தாள் . அதன் 6 இதழ்களை தேடி எடுத்து தொகுத்த, நூலகம் நிறுவனமும் ஜீவநதி பதிப்பகமும் இணைந்து இன்று வெளியிட்டுள்ளார்கள். அப்பாவின் ஆக்கங்கள் அச்சில் வெளிவந்த காலமாக 1940 - 2006 என்று பதிவுகள் தருகின்றன. அதாவது அவரது 16ம் பராயம் தொடங்கி அவரது இறுதி காலம் வரை. எமது அறிவுக்கு தெரிந்து, அப்பாவின் கன்னி முயற்சி 1940ம் ஆண்டிற்கு முன்னரே வெளிவந்த "ஆறுமுக நாவலர்" என்னும் கையெழுத்து பிரதிகளே! அது எமது செவி வழிச் செய்தி மட்டுமே. பின்னர் அப்பாவின் காலத்தின் முடிவில் படைப்புகள் பல தொகுதிகளாக அச்சிலேறி, பகுதிகளாக பரணேறி பின் பக்கங்களாக வெளியேறின ! இவ்வகையில், நூலகத்தின் இச் சீரிய செயல் எமக்கு பேரானந்தத்தையும் மிகுந்த மன நிறைவையும் தருகின்றன. இந்த தருணத்தில் மீள் பதிப்பாசிரியர் குழுமத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றோம். நூலகம் நிறுவனத்தினருக்கும் ஜீவநதி பதிப்பகத்திற்கும் நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். "தேன்மொழி கவிதைகளின் தொகுப்பு" எல்லோரிற்கும் உவகை அளிப்பதோடு வருங்கால கவிஞர்களின் அரிச்சுவடியாகவும் பயன் பெற வேண்டிக் கொள்கிறோம்.

– செந்தாமரை , தேன்மொழி , மலர்விழி

(வரதர் குடும்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

## வரதரின் இதழ்கள்

ஈழத்தின் நவீன இலக்கிய வரலாற்றில் வரதர் என்கிற தி.ச.வரதராசன் ஒரு முன்னோடிப் பங்களிப்பாளர். எழுத்தாளர் சங்கம், புதுக்கவிதை, சிறுகதை, இதழியல், பதிப்புத்துறை, அச்சுத்துறை எனப் பல்வேறு இலக்கிய, பதிப்புத் துறைகளில் அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளார். அவற்றில் சஞ்சிகை வெளியீடு முதன்மை யானது எனலாம்.

வரதரின் இதழ் வெளியீட்டு முயற்சிகள் 1943இல் "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்" சார்பாக மறுமலர்ச்சி எனும் கையெழுத்து இதழ் வெளியிடுவதில் ஆரம்பித்தது. 1946 பங்குனி மாதத்தில் மறுமலர்ச்சி அச்சு வடிவத்தில் வெளிவரத் தொடங்கியது. தி.ச.வரதராசன், க.கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன், ச.பஞ்சாட்சரசர்மா, க.இ.குமாரசாமி ஆகிய ஐவரின் முயற்சியில் மறுமலர்ச்சி வெளியாகியது. இவர்களில் வரதரே முன்னின்று செயற்பட்டு இதழ் தொடர்ச்சியாக வெளிவரக் காரணமானார். 1948 ஐப்பசி வரை 23 மறுமலர்ச்சி இதழ்கள் வெளியாகின.

மறுமலர்ச்சியை வெளியிடுவதற்காக ஸ்ரீபார்வதி அச்சகத்துடன் வரதருக்கு ஏற்பட்ட தொடர்பு அச்சுத்துறையில் அவர் தொழில் பழகிச் சேர்ந்து கொள்ளக் காரணமாக அமைந்தது. பார்வதி அச்சகத்தில் 1949-1951 காலத்தில் அவர் முழுநேர ஊழியராகப் பணிபுரிந்தார். 1950இல் ஆண்டுதோறும் வெளிவரும் வகையிலான ஆண்டிதழ் வெளியிடும் முயற்சியாக "வரதர் புதுவருஷமலர்" வெளியானது. அவரது பெயரில் ஓர் ஆண்டுமலர் வெளியான போது வரதரின் வயது வெறும் 26 மட்டுமே. இந்த ஆண்டிதழ் 1950இன் பின்னர் வெளிவரவில்லை.

1952இல் வரதர் ஆனந்தா அச்சகத்தின் முகாமைத்துவப் பங்காளரானார். அக்காலப்பகுதியில் ஆனந்தன் எனும் இலக்கிய இதழை அவர் தொடங்கினார். ஆனந்தனின் ஆசிரியராக வரதரும் இணையாசிரியராக ஆரம்பத்தில் யாழ்ப்பாணனும் பின்னர் புதுமைலோலனும் செயற்பட்டனர். வரதரின் கயமை மயக்கம், வாத்தியார் அழுதார் போன்ற சிறுகதைகள் ஆனந்தன் இதழில் வெளியானவையே. ஆனந்தன் ஒன்றரை ஆண்டுகள் மட்டுமே வெளியானது.

1955இல் வரதர் தேன்மொழி இதழை ஆரம்பித்தார். ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழ் என்ற குறிப்புடன் இந்த இதழ் வெளியானது. ஒவ்வொன்றும் 16 பக்கங்களைக் கொண்டதாக 6 தேன்மொழி இதழ்கள் வெளியாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1961இல் வரதர் மீண்டும் இதழ் முயற்சியைத் தொடங்கினார். புதினம் என்ற பெயரில் "சுவையான செய்திக் கிழமை இதழ்" எனக் குறிப்பிட்டு வார இதழ் வெளியாகத் தொடங்கியது. இலக்கியம் மட்டுமில்லாமல் அரசியல், சினிமா, அறிவியல், நகைச்சுவை எனப் பல்சுவை இதழாக ஓராண்டைத் தாண்டிப் புதினம் வெளியானது.

1964இல் "வரதரின் பல குறிப்பு" எனும் ஆண்டு வழிகாட்டி (Directory) மலரை வரதர் தொடங்கினார். மொத்தம் 4 மலர்கள் வெளியாகின. வழிகாட்டி நூல்களுக்குரிய வகையில் நாளாந்த வாழ்கைக்குத் தேவையான பெருமளவு தகவல்களைக் கொண்டதாக வரதரின் பல குறிப்பு அமைந்திருந்தது.

1971இல் வெள்ளி எனும் பல்சுவை மாத இதழை வரதர் தொடங்கினார். இது மாதமிருமுறை இதழாகவும் வெளிவந்தது. இரண்டு ஆண்டுகளாவது இந்த இதழ் வெளிவந்ததை உறுதிப்படுத்த முடிகிறது.

1992இல் மாணவருக்கான பொதுஅறிவுச் சஞ்சிகையாக அறிவுக் களஞ்சியத்தை வரதர் தொடங்கினார். இதன் ஆசிரியராக வரதரும் ஆசிரியர் குழுவில் செங்கை ஆழியான், புத்தொளி போன்றோரும் இடம்பெற்றிருந்தனர். வரதர் வெளியீடாக ஆனந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு குறைந்த விலையில் வெளியானது. முதல் இதழ் 1993 யூலையில் வெளியாகியது. பாடசாலை அதிபர்கள், சமூகப் பெரியோர் பலர் இதன் காப்பாளர்களாக இருந்தனர். பாடசாலைகள் ஊடாகப் பெருமளவில் விநியோகிக்கப் பட்டது. காகிதத் தட்டுப்பாடு இருந்ததால் அப்பியாசக் கொப்பித் தாள்களில் அச்சாகியும் சில இதழ்கள் வெளிவந்தன. 1995 இடம்பெயர்வு காலத்தில் 34ஆவது இதழுடன் தடைப் பட்டது. 1998இல் மீளத் தொடங்கப்பட்டபோதும் மேலும் 3 இதழ்கள் மட்டுமே வெளியாகின.

1990களின் ஆரம்பத்தில் இடப்பெயர்வுக்கு முன்னர் புதினம் இதழும் மீள ஆரம்பிக்கப்பட்டுச் சிலகாலம் வெளியானது.

1999இல் வரதரை நிர்வாக ஆசிரியராகவும் சிற்பி, செங்கை ஆழியான் ஆகியோரை இணை ஆசிரியர்களாவும் கொண்டு மறுமலர்ச்சி மீண்டும் தொடங்கப்பட்டது. ஆயினும் 2 இதழ்கள் மட்டுமே வெளியாகின.

வரதரை ஆவணப்படுத்தும் செயற்றிட்டம் ஒன்று நூலக நிறுவனத்தால் 2016 தையில் தொடங்கப்பட்டது. அதுவரை நூலகத்தில் இணைக்கப்படாத அவரது நூல்கள், சஞ்சிகைகள், புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் போன்ற ஆவணங்களும் வரதரின் மகளான தேன்மொழியின் வாய்மொழி வரலாறும் பதிவு செய்யப்பட்டன.

இச்செயற்றிட்டத்தில் மின்வருடப்பட்ட பிரதிகள் கோப்பாய் சிவம், செல்லத்துரை சுதர்சன் ஆகியோரின் முயற்சியில் மறுமலர்ச்சி முழுத்தொகுப்பாக வெளிவரப் பயன்பட்டது. புதினம், வெள்ளி, அறிவுக்களஞ்சியம், ஆண்டுமலர்கள் போன்றவற்றில் கிடைத்த பிரதிகளை ஆவணப்படுத்தினோம். ஆனந்தன் இதழ் இப்போது ஒரு பிரதிகூட யாரிடமும் இல்லை.

வரதரின் குடும்பத்தினரிடமிருந்து பெற்ற ஒரேயொரு தேன்மொழி இதழை மட்டுமே நூலகம் வலைத்தளத்தில் இணைக்க முடிந்தது. ஈழத்தின் முதலாவது கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் என்ற வகையில் ஏனைய இதழ்களைப் பெற முயற்சிகள் எடுத்தோம். செங்கை ஆழியான் குடும்பத்தினரிடம் சில தட்டச்சுச் செய்யப்பட்ட பக்கங்கள் இருந்தன. நாவற்குழியூர் நடராசனிடம் போட்டோப் பிரதிகள் கிடைத்தன. இந்த மூன்று பிரதிகளையும் வைத்துக் கொண்டு தேன்மொழியில் வெளிவந்த 96 பக்கங்களில் 95 பக்கங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள முடிந்தது. முதலாவது இதழின் முதலாவது பக்கம் கிடைக்கவில்லை.

தேன்மொழி இதழ்த் தொகுப்பினை அந்த ஒருபக்கம் இல்லாமலேயே வெளியிட அறிவிப்பும் வழங்கியிருந்தபோது ஸ்ரீ பிரசாந்தன் குறித்த முதற்பக்கத்தை அனுப்பி உதவினார். அவ்வகையில் தேன்மொழியைத் தொகுக்க உதவிய வரதர் குடும்பத்தினர், செங்கை ஆழியான் குடும்பத்தினர், நாவற்குழியூர் நடராசன், ஸ்ரீ பிரசாந்தன் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

ஆல்முனை சாஹித்திய விழாமலரில் வெளியாகிப் பின்னர் திறனாய்வுக் கட்டுரைகள் எனும் நூலில் சேர்க்கப்பட்ட எம். ஏ. நுஃமானின் கட்டுரையிலிருந்து தேன்மொழி தொடர்பான சில பகுதிகளை நன்றியுடன் இந்த நூலின் பின்னட்டையில் மீள்பிரசுரம் செய்கிறோம். அது ஒரு விரிவான அறிமுகக் குறிப்பாக அமைகிறது.

வரதர் குடும்பம், நூலக நிறுவனம், ஜீவநதி பதிப்பகம் ஆகியோரின் கூட்டு முயற்சியில் இந்த நூல் வெளிவருகிறது. இப்பணிக்குப் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

**பதிப்பாசிரியர்கள் சார்பில்**
**தில்லைநாதன் கோபிநாத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்மொழி

## திங்கள் வெளியீடு

*யாழ்ப்பாணம்.* *புரட்டாதி,1955*

**தன்னைத் தனி நேர் தமிழகத்துத்
தாயே வருக!**

என்னைப் புரக்கும் மன்னரிலை
இயற்சீர் பரவும் புலவரிலை
இனிமை விழையும் மக்களிலை
ஈவோ ரில்லை யென்றிரங்கி
வன்னக் கருணை வடிவழகி
வாரா திருக்க விதியில்லை
மனத்தின் படியே வினைபுரியும்
மைந்தர் பலரு மிருக்கின்றார்
முன்னைப் பொருட்கு முதற்பொருளே
மூவா விளமை மொழியணங்கே
முந்நீர் வளைத்த வியனுலக
முழுது மாண்ட பெருமாட்டி
தன்னைத் தனிநேர் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ் கூடற்
றலைவீ வருக வருகவே.

- நவாலியூர்ச்
சோமசுந்தரப்புலவர்

**1**

ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'படுத்துகிற பார்வை!'

நான் பார்க்கத் தான்பாராள் நான்பாரா விட்டதன்பின்
தான் பார்த்து வான்பார்க்கும்; நான் பார்க்கில்-தான்பார்த்த
வான்பார்த்து மீன்பார்த்து வையத் துளவெல்லாம்
தான் பார்க்கு மென்னைத் தவிர்த்து.

மான் பார்த்த நோக்கென்னைத் தான் பாரா விட்டதன்பின்
நான் பார்க்கும் போதென்னைத் தான் பார்க்கில்-ஏன் பார்த்தாய்
என்றென்னைத் தின்ன எனப்பார்க்கும், அந்நிலையே
வென்றென்னைத் தோற்க விடும்.

நான்பாரா விட்டாற்பின் தானபாராள் போற்பார்த்து
ஏன்பாராய் என்றே எனை ஈர்க்கும்-நான் பார்த்தால்
தான்பாராள் என்றவளே நான் பாரேன் போற்பார்க்கத்
தேன் பாயு முள்ளத் திருந்து,

பார்த்தாலுந் துன்பம், படுத்துகிற பார்வையினை
நீத்தாலும் ஆங்கே நெடுந்துன்பம்-பார்த்தால்
படுத்தும் அவளை, அதுஇன்றேல் என்னை
அடுத்துக் கெடுக்கும் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'து யி லெ ழு ச் சி'

" பாழ்வயிற்றைக் கழுவுதற்குப் படும்பா டிங்கே
பஞ்சுபடாப் பாடு" என்று பாடு கின்றாய்;
கேள் தமிழா, துக்கசுகம் இரண்டும் நித்தம்
கிளைத்துவரும் யார்க்குமிது சக சம் அப்பா;
கூழ் குடித்தும் நாள் முழுக்கக் கூலிக் காகக்
குடல் தெறிக்க ஓடுகிறான் றிக்ஷோக் காரன்;
"ஊழ்" இதென்று சோர்ந்திருந்தான் என்றால் எங்கே
உணவருந்தப் போவதவன்? உடைக்கென் செய்வான்?

கட்டுதற்குக் கந்தையில்லைக் கால் வயிற்றுக்
கஞ்சியுமோ கிடையாது என்றால் வீணே
நட்டகட்டை போலிருந்து " நாமென் செய்வோம்?
நம் தலையெ முத்தி" தென்று நாணம் இன்றி
வெற்றுரைகள் பேசுகிறோம்; விழல்வே தாந்த
மேதையிலே யாருமெமை மிஞ்சார்; பாடு
பட்டவனே பயன்பெறுவான்; பருவம் பார்த்துப்
பயிரிடுவோன் அதன் விளைவைப் பறிப்பான் அன்றோ?

தொழில்களிலே உயர்விழிவு இல்லை; ஆனால்,
தொழும்புசெயும் அடிமைமுறை தொலைய வேண்டும்;
உழவு, குடிசைத்தொழில்கள் வியாபாரங்கள்
உயர்முறையில் நடத்திடுவோம்; உலகத்தோடு
சரிநிகராய்த் தமிழரினிந் தலையெடுக்கச்
சாத்திரஞா னம் தமிழில் தழைக்க வேண்டும்;
அரசியல் விஞ்ஞானநிலை பொருளாதாரம்...
அனைத்தையும் நாம் ஆய்ந்து புது ஆக்கஞ் செய்வோம்

"பழந்தமிழர் அதுசெய்தார் இதுவுஞ் செய்தார்
பண்ணாத(து) அவர் கணக்கில் இல்லை"யென்று
குழந்தைமொழி வழங்கலிலோர் கொள்கை இல்லை;
குவலயமெல்லாம் புரட்சிக் கூச்சல் கேட்டும்
விலங்குகளாய் உணர்விழந்து அறிவும் மங்கி
வேதாந்தம் பேசுகிறோம் விழல்வே தாந்தம்!"
இளந்தமிழா, எழுந்துலகம் எல்லாம் சுற்றி
எங்கள் நிலை கண்டுருவ எழுச்சி காண்பாய்! "

**– சாரதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அ வ ள்'

ஜென்மாதி ஜென்மத்தின் சேர்க்கை தானோ
செய்தபெருந் தவப்பயனின் விளைவு தானோ
மன்னாதி மன்னர்க்கும் வாழ்விற் கிட்டா
மங்கையவ ளின்றென்னை யிகத்திற் சேர்ந்து
பொன்னான உறைகளினாற் புன்மை போக்கிப்
புத்தொளியும் புதுவாழ்வும் புகுத்தி வைத்தென்
அன்னையாய்த் தந்தையாய் அரிய சுற்றம்
அனைத்துமாய் அவளன்பு காட்டி நின்றாள்

எண்ணாத எண்ணமெலா மெண்ணி யெண்ணி
இருள்வழியில் யான்சென்றே யலையுங் காலை
பண்ணான இசை சேர்த்துப் பாடல் பாடப்
பகுத்தறிவும் பலதிறனும் என்னிற் சேரப்
பெண்ணாவாள் பெருந்தகையாள் பிரமன் நாவிற்
பெரிதுறையும் பெருமாட்டி போல்வாள் நங்கை
கண்ணான கண்ணேயாம் கருத்தினுள்ளே
கவின்மணியாய் நின்றென்னை யொளிர வைத்தாள்

குளிர்காவும் நறுமலருங் கூடித் தோன்றக்
கொழுமைசேர் இன்காற்றும் மெல்ல வீச
அளியினமும் அன்னமெலாம ஆங்குக் காண
அசைந்தோடும் அருவிகளும் மருங்கு பாய
நளினமெனுங் கரமுடையாள் பக்கல் நின்றே
நானிலத்து வியப்புக்கள் தோன்ற வைப்பாள்
எளிமைதரும் வாழ்வுமெலா மிகத்தி லோட
ஏற்றஞ்சேர் விண்ணவனாய் மாறி நிற்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நதி'

மலையின் சிரிப்பே மரங்களின் நாதமே!
அலையுறும் பட்சியின் அற்புத வீணையே!
பசும்புற்றரையின் விளங்கிய தோற்றமே!
காலையின் அழகினைக் காட்டுகண் ணாடியே!
வசந்தத்தின் உயிரே! வளமலர் யாவுமே
உன்னுத ரத்தே உதித்தன அன்றோ!
பொன்னும் வெள்ளியும் மின்னும் மணிகளும்
சிந்துதல் செய்குவை; சேரும் இடந்தோறும்.
வெண்மணற் பரப்பினில் மெல்லெனத் தவழுவை;
பளிங்கெனத் தெளிந்த உன் னுதரத்தே பல
நலந்தரு மணிகளும் நல்லொளிக் கற்களும்
காணும் கண்ணுக்குக் களிப்புடன் நின்றன;
வஞ்ச மின்றியே மஞ்செனெ ஓடுவை;
சென்ற காலத்தின் இன்ப வடிவமாய்
நீயே!
மண்ணில் மாந்தர் உறவினை நீங்கியே
தண்ணென் நீர்ச்சுனை தன்னை விரும்பினை
புண்ணியப் பொருளே! புலவின்பமே!

(ஒரு ஸ்பானியக் கவியின் எண்ணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் போச்சோ?

அஞ்சுகமே! என்அன்பே! அன்றோர் மாலை
அருவிவெட்டும் போதுவிழி யம்பைவீசி
நெஞ்சஅடிச் சுரங்கத்துக் கதவுடைத்து
நிலையான ஓர் இருக்கை தேடிக்கொண்டு,
கொஞ்சு தமி ழனு ராகத் தேன் துளிக்கக்
கூப்பிட்ட பூங்குயிலி! மெட்டிகொட்டும்
கஞ்சஅடி முடமாச்சோ? அன்னைபேச்சுக்
காதேற லாச்சோ?உன் காதல்போச்சோ..?

ஊரோர், ஆறோடி ஆழியோடும்
ஒன்றாகுந் தீர்த்துப் பட்டுமண்மேல்
நீரோடுங் கண்ணோடும் ஆவலோடும்
நெகிழ்ந்துள்ள நெஞ்சோடுந் தவங்கிடந்து
தூராகித் துரும்பாகித் தோலுள்வற்றித்
துவண்டாடு மெலும்புக்கூ டாகிவிட் டேன்!
ஆரோடு சொல்லித்தான் அமைதி கொள்வேன்?
அநியாய மாயென்னைக் கொல்கின்றாயே...!

உள்ளொன்றி யுணர்வொன்றி உயிருமொன்றி
உலகத்தி னுயர்வான பாசங்கொண்டால்
அலலென்ன? பகலென்ன அயல்வீட்டாரின்
அரட்டைக்குப் பயமென்ன? அருகில்வந்து
கொள்,கண்ணே! என்மார்புக் கிளையில்ஏறிக்
குதித்தாடிவ் வுலகத்தின் மூத்த கூத்தை!
நில்லாதே, தனித்தங்கே! பிரிவினால் நான்
நீறாகிப் போய்விட்டா லேதுசெய்வாய்..?

இரந்துண்டு வாழ்கின்ற பஞ்சையென்றா
எனைவந்து சேருவதற் கஞ்சுகின்றாய்..?
திரண்டுள்ள புயமுண்டு; சோம்பிவீழாத்
தேகத்திற் தமிழ் ரத்த முண்டு; நாட்டிற்
பரந்துள்ள நிலமுண்டு, நீருமுண்டு;
பசிகொண்டு நீவாட விடுவேனோடி...?
சுரந்துள்ள அன்புன்னை வழிநடத்தும்!
சுயபுத்தியோடென்னை வந்து சேராய்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருசுவில், அரிஅரன்

# 'நி ல வு வி டு தூ து'

கொக்கிற கின் வெண்மைக்
குளிர்நிலவே! நீ எனது
பக்கலிலே நிற்பதனால்
என்னபயன்?-இக்கணமே
"வாடிப்போய் வாதை
அடை...கின்றாள் போ"என்று
ஓடிப்போய் அத்தானுக்(கு) ஓது.

முத்துநிறப் பாலொளிவெண்
பற்களினால் வெற்றிலையின்
கொத்தைக்கு தப்பிச்
சுகங்காணும்-அத்தானின்
சொத்தே நான் என்றும்
சொல்லாய் நிலவே! என்
சித்தம் அவர் ஒன்றே தெளி.

தேடுகிறாள் உங்களை அத்
தென்னம் பசந்தோப்பில்
"பாடுங்குயில் அத்தா
னோ?" என்று-ஓடிப்போய்க்
காமாந்தக்காரி
கருங்குயிலைத்தான் கண்டு
ஏமாந்தாள் என்றும் நீ சொல்.

கொய்யாப் பழக்கன்னம்
கோவைப் பழ இதழ்,பூ
வையா நீள் கூந்தல், இள
நீர்க் கொங்கை-மெய்யாய்,
இவையெல்லாம் அத்தானில்
இன்பம் பெறமிக்க
நசைகொள்வ தாயும் நவில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எதிர் காலச் சித்தன் பாடல்'

எதிர்காலத் திரை நீக்கி அதற்கப்பால் யான்
ஏகிட்டேன்; ஏகிட்ட போதில் என்முன்
கதிர் போலும் ஒளிமுகத்தான் கருணையூறும்
கமலம்போற் கண்ணிணையான் ஒருவன் வந்தான்
"எதிர்கால உலகமிஃது மனிதா நீ இங்
கேன் வந்தாய் இவண்காணும் பலவுமுன்னை
அதிர்வெடி போல் அலைக்கழிக்கும் ஆதலாலே
அப்பனே, நிகழ்காலம் செல்க" என்றான்.

அறிவினிலே அடங்காத தாகம் கொண்டேன்
அவ்வுரையால் அடங்கவில்லை. அவனை நோக்கிச்
"செறிவுற்ற பேரறிவின் சேர்க்கை வேண்டும்
செந்தமிழன் யானொருவன் ஆதலாலே
மறுவற்ற பேராண்மைக் கோட்டைஎன்னை
மலைவுறுத்தா தெதிர்காலம்" என்று கூறிக்
குறுகுறுத்த விழியுடையான் குமுதவாயன்
குணமென்ன, பெயர் என்ன என்றுகேட்டேன்.

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
எதிர்காலச் சித்தன் யான் நிகழ்காலத்தர்
உனக்குமுன்னர் வாழ்ந்திட்ட சித்தரல்லால்
உன்காலச் சித்தரையும் ஏற்காரப்பா!
மனக்குறைவால் கூறவில்லை மகிதலத்தில்
மடைமையொடு மயக்கத்தின் ஆட்சி என்றும்
கனத்துளதிங் கென்பதையே கருதிச்சொன்னேன்
காசினியின் பண்பிதனைக் காணப்பா நீ?

வருங்காலச் சித்தனுரை செய்த வார்த்தை
வையகத்தார் அறிதற்காய் இங்குசொல்வேன்
"பெரும்போர்கள் விளைகின்ற நிகழ்காலத்தில்
பிளவுறுத்தும் பலவகையாம் பேதமுண்டு!
ஒருமைபெறும் மனிதர்களை ஒன்றா வண்ணம்
ஊடமைத்த சுவரனைய பேதம் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொருங்கிவிழும் உலகெல்லாம் ஒன்றேயாகும்
நோக்கிடுவாய் தூரஎதிர் காலமீதே.”

அண்டுபவர் அண்டாது செய்வதேது
அனியாய பேதங்கள் பெயரைச்சொல்வேன்
துண்டுபட்டுத் தேசங்கள் என்றிருத்தல்
தூய்மையாம் இனம்மொழிகள் மதங்களென்று
அன்றுதொட்டிங் கின்றுவரை இருக்குமந்த
அர்த்தமிலாப் பிரிவினைகள் எல்லாம் சாகும்
ஒன் றுபட்டிவ் வுலகெல்லாம் ஒற்றையாகும்.
ஒருமொழியில் ஓரரசு புரக்குமப்பா!

அரசெல்லாம் ஒழிந்துலகில் ஓரரசே யுண்டாம்
அறங்கூறும் ஒருமதமே உலகெல்லாம் ஆகும்
விரசமொடு விகற்பங்கள் வளர்க்குமொழி எல்லாம்
வீழ்ந்துவிடும் ஒருமொழியே இவ்வுலகில் உண்டாம்
சரசமொடு உலகத்து மக்களெல்லாம் தம்மைச்
சமானர்கள் மனிதகுலம் என்ற இன மென்பார்
அரசர்கள் ஏழை பணக்காரன் என்ற பேதம்
அத்தனையும் ஒழிந்துவிடும் எதிர்கால உலகில்,

வேறு

செந்தமிழும் சாமீழச் சிங்களமும் சாகும்
செகமெல்லாம் ஒருமொழியே தலைதூக்கி நிற்கும்
நந்தமிழர் இனம் சாகும் பிறஇனமும் சாகும்
நாடெல்லாம் மனித இனம் ஒன்றுதலை தூக்கும்
எந்தமொழி இவ்வுலகில் நிலவுமெனக் கேட்பில்
எண்ணிக்கை கொண்டமொழி எம்மொழியோ இங்கு
அந்தமொழி தானப்பா அரசாளும் உண்மை
அது நன்று தானப்பா பிரிவினைகள் ஒழிதல்.

நிகழ்காலச் செந்தமிழர் இதுகேட்டுச் சீறி
நீசனுரை நிகழ்த்தாதே செந்தமிழே உலகின்
புகழ்மொழியாய் உலகத்தின் பொதுமொழியும் ஆகும்
புதுமைதனைக் காண்பீர்கள் என்றுபுகன் றிடுவார்
இகழ்ந்திடுவார் எதிர்காலச் சித்தனுரை தன்னை
இம்மியள வேனும்பி மானமில்லா மூர்க்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்காலத்திருந்திருந்தால் செய்வதறிந் திடுவோம்
நெஞ்சு பிளந் தெறிந்திருப்போம் என்றுநிகழ்த்திடுவார்.

பிறப்பாலே யானுயர்வு தாழ்வுரைக்க மாட்டேன்
பிறப்பாலே என்மொழியே சிறந்ததெனச் சொல்லேன்
பிறப்பெந்தன் வசமாமோ பிரமத்தின் வசமாம்
பீரூவில் பிறந்திருந்தால் பீருமொழி பீடே
வெறிமிகுந்த நிகழ்காலத் தீதுணர மாட்டார்
விழலுக்கே பெருங்கலகம் விளைக்கின்றார் அன்னார்
அறிவற்றே துன்பங்கள் அனைவர்க்கும் விளைப்பார்
ஐய்யய்யோ இவர் மடமை என்னென்று சொல்வேன்.

புதுயுகத்தின் குரல்போல எதிர்காலச் சித்தன்
புகன்றமொழி கேட்டபின்னர் யானவனைப் பார்த்து
"எதிர்காலச்சித்தா, உன் இனிய மொழி கேட்டேன்
எண்ணங்கள் விரிவடையும் என்னுடன் நீ வந்து
மதிகெட்டார் வாழ்கின்ற வையகத்தில் புதிய
வாழ்வேற்றிச் செல்லாயோ" என்றிறைஞ்சி நிற்க
மெதுவாகச் செவ்விதழ்கள் திறந்ததையு மங்கே
மென் னிலவுக் குஞ்சிரிப்புப் பிறந்ததையும் கண்டேன்.

காலத்தின் கடல்தாவி நீ இங்கு வந்த
காரணத்தால் ஏதறிவு என்பதை நீ கண்டாய்
ஞாலத்தில் நிகழ்கால மயக்கத் திலுள்ளோர்
ஞானத்தைக் காண்பாரோ காணார்க ளப்பா!
காலத்தை யான் தாண்டிக் காசினிக்கு வந்தால்
கட்டாயம் ஏனையவர்கள் எற்றிமிதித் திடுவார்
ஆலத்தைத் தந்தன்று சோக்ர தரைக் கொன்ற
அன்பர்களுன் மனிதச் சோதர்க ளன்றோ?

வேறு

ஆதலினால் நிகழ்கால மனிதா அங்கு
யான் வரேன் நீபோவாய் என்றான் ஐயன்
காதலினால் கால்களெனும் கமலம்தொட்டுக்
கண்ணொற்றி விடைபெற்றேன் திரை நீங்கிற்று
பாதகர்கள் முழுமடமைப் போர்கள் சூழும்
பாருக்கு நிகழ்காலம் வந்தேன் எங்கும்
தீதுகளே கடம்புரியும் நிலமைகண்டு
திடுக்கிட்டேன். என்றிவர்கள் உண்மைகாண்டல்.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு வெறி?

மது தா னருந்தி மதியே கலங்க
"மதகோ மடத்து வெளியோ!
இதுவோ வெனில்ல" மெனவே நினைந்து
இருகண் சிவந்து எரிபோல்
"சது"ராடக் காரின் மிதியே யமுங்க
சனங்கள் பதுங்கி நெரிய
அதிவேக மாக அவர்காரை யோட்ட
அங்கேயொ றெழை பசியால்
மிகவே யிளைத்து மெயின்றோட்டிற் காலை
மிதித்தான் நடந்து களைத்தான்
பகலோன் மறைந்து சிலநேர மாச்சு
பறந்தேயக் காரும் வரவே
சக சோதி யாக ஒளிவீசும் கம்பத்(து)
அருகே யவ்வேழை யேக
"தகடட்ட" போட்டு மிகவேக மாக
தனவந்த ரோடு புதிய
காருங் கவிழ்ந்து விடவேயவ் வேழை
கடிதில் நசுங்கி மடிந்தான்
"பாருங்கள் பாவம் பரிதாப மென்று
பலபேருஞ் சொல்லி விடவும்
ஊருந் திரண்டு வரவே வழக்கு
ஓரா று மாத முடிவில்
தீரும்பொ ழுதவ் வேழைவெ றியில்
தெருவில் நடந்த ததனால்
இடையிற் புகுந்து சில்லில் விழுந்து
இறந்தா னென நீதியினோர்
தடையின்றிக் கூறி விட்டா ரச்செல்வர்
தன்மானத் தோடே போனார்.
மடைநீக்கி யோடும் பெருவெள்ள மென்ன
மதுவைத்தன் வாய்க்குள் விட்டுக்
கடையாகிக் கள்ளு வெறியால் மருண்ட
கசடர்-இழிந்தோர்-எவரோ.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புத்தொளி பாச்சுக!'

வீணையி லேஒரு நாதம் எ ழுந்தது;
மெல்விரல் தந்தியை மீட்டிட, மேதினி
வாணிஉன் இன்னிசை யில்முழு குற்றது
மாமகிழ் வென்றன் உ ளத்தினை உற்றது;
நாணிய கண்.முறு வல்செயும் இன்னிதழ்,
நாடகம் ஆடிடு கீதமெ னும்ஒரு
"தோணி" செலுத்திடு கின்றக ரங்கள், இத்
தோகையை ஒத்தஉன் சொத்திவை யோ? அடி,

காதிலி வள்பொழி இன்னெலி, சிந்தனை
கவ்விஇழுத்தது; கொவ்வைஇ தழ்களின்
கோலுதல் தோறும்இ ழைந்து, நெளிந்திடு
கோகில கானம்உ ளந்தழு விக்களி
வீதியி லேமுகி லூடு நடத்திட
வெண்மதி யோடுக லந்தும கிழ்ந்தனன்
நாதம் அ ணைந்தம னந்தனி லேதுயர்
நைந்தும றைந்து, பு தைந்தது; கேளடி !

செந்தழிழின்பதம் என்ன இ னிப்படி!
தேன்மொழி யாம்அவை என்னுயிர் பற்றிஎன்
சிந்தை இ முத்தொரு பொன்னுல கைக்கொடு
சேரஅ ழைத்தன இங்கவை; வாணி; உன்
கந்தம லர்க்கரம் பட்டதும், வீணே இக்
காற்றில் இ னித்திடும் விந்தைகள் என்னடி!
சுந்தரி உன்ஒரு சொல்லிசை யின் வழி
சொர்க்கம்இ றங்கி நடக்குது பூமியில்.

ஆபினும் கேள்; என தன்னை த மிழ், இசைக்
காகப்பி றந்தவ ளா மடி; சிற்சிலர்
"சி" என வேகனி வீசி எறிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ் தன்னைஒ துக்கித்தெ லுங்கோடு
மாய்கிற பேதைமை கொண்டுதி ரிந்தனர்.
மாறிட வேண்டுமிம் மாபெருந் தீமைகள்
வாய் இதழ் மூடிஇ ருப்பதேன்? சொல்ஒரு
வார்த்தை இம் மானிடர் போக்கினை மாய்த்திட,

எள்கள் த மிழ்தனே விட்டிவர், "அன்னியம்;
ஏன்தொழு கின்றனர்? தீந் தமிழ் மாந்திடிற்
பொங்கி எழுந்துளம் பூரண மாகிடும்;
பூத்திடும் என்பத நிந்தில ரே அடி!
சங்கித ஞானம்எ னக்கிலை என்ப து
சத்தியம்! ஆயினும், எம்தமிழ் அல்லவை
சங்கதி மிக்கவை ஆயினும், என்னசீ-
சற்றும்சு வைக்க அறிந்திலன்; குப்பைகள்!

கேட்பதி லேஒரு சொல்லும்அ றிந்திலர்.
கீதம்எ னச் சிலர் காதைவ ருத்திட
ஆட்டுகி றார்தலை; ஆ என வும்பெரி
தாக "ரசிக்கிற" பெற்றியி னார் வெறும்
"ஒட்டைகள்" ஆமடி செந்தமிழ் அல்ல வை
ஒன்றுமி லாதவெ றுங்குழ றல்; மதி
கேட்டைஉ ணர்த்திடு கின்றதோர் கேவலம்;
கீழ்மை அடைந்த இ னத்தின ரின்குழி.

இன்னவை நம்மவர் பேதைமை; உன்னிசை
எல்லேயி லாதக ளிப்பை அ வித்தது.
அன்னதோர் இன்ப அ திர்ச்சியில் என்மனம்
அத்தனை யும்வெளி வைத்தனன் உன்முனர்.
கன்னல்ஒ லித்திடு கண்மணி யே!தமிழ்
காத்திட கம்மவர் ஏன் விழை கின்றிலர்?
புன்னகை, மின்னல்பு துக்கவி தை!!அது
புத்தொளி பாய்ச்சுக "பித்தர்கள்" சிந்தையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ப ல் லி'

தாய்முலை உண்டுத மிழ்முளை ஒன்று
வாய்வழி யேதயிர் சிந்திந னைந்து
போய்உலை மூட்டிடு வாளைம றந்து
பாயில்உ ருண்டது பாதம்எ றிந்து!

நீச்சல் அ டிக்கும்நி லத்தினி லே!கை
வீச்சினில் விண்ணில்மி தக்கநி னைக்கும்
கூச்சலி டும்களி கொண் (டு)!எது கண்டும்
ஆச்சரி யக்கடல் ஆழம்அ மிழ்ந்தும்!

காற்றில்எ ழும்கடு கோஎன முன்னால்
தோற்றிய வண்டுத னைத்தொட ரும்கண்,
ஏற்றிய விற்புரு வங்கள்இ றக்கி,
ஈற்றில் அ தோடுத ரையில்இ ருக்கும்!

விந்தைநி கழ்ந்தது வேறிலை; அங்கே
சிந்திய மைத் துளி போற்சிறு வண்டு
குந்திய தும்ஒரு பொந்தினை விட்டு
வந்ததை உண்டுந டந்தது பல்லி!

அம்ம! அ தோ,மிக ஆத்திரம் உற்றிவ்
வெம்மையி னாலுளம் வெந்துவெ குண்டு,
"கும்மிஅ டித்த"குழந்தைது டித்து
விம்மிவெ டித்துவி சித்தல றிற்று

அன்னைநு ழைந்தனள், அள்ளிஅணைத்தாள்;
கன்னம்ந னைத்த கண் ணீரைஅ ழித்தாள்;
என்ன! எ தற்கென ஏங்கிஇ ளைத்தாள்!
தன் இள மார்பை அ ருந்த அ ளித்தாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதர்

## 'காதலாம் காதல்'

கண்டதும் காதல்;
கேட்டதுங் காதல்;
அண்டையில் ஆணுடன்
பெண்டுகள் செய்வது
ஐயோ, காதல்! காதல்!

பள்ளிக் கூடப்
பிள்ளைக ளிடையே
மெள்ளென. வந்து
தொல்லைகள் தருவது
ஐயோ, காதல்! காதல்!

ஆணும் பெண்ணும்
அலுவல கத்தில்
காணும் போது
கரையை யுடைப்பது
ஐயோ, காதல்! காதல்!

போக்குவ ரத்தில்;
பொழுதைப் போக்கும்
"பாக்"கில், சினிமா,
"பீச்"சிலும் வருவது.
ஐயோ, காதல்! காதல்!

காணிவல் நாளில்
கிட்டிளம் ராஜா-
ராணிய ரிடையே
தானிட மடைவது
ஐயோ, காதல்! காதல்!

உலகந் தெரியா
தோரிள வயசில்
பலபேர் மனசைப்
பாழாக் குவது
ஐயோ, காதல்! காதல்!

இளமையின் மோகன
இன்பஉ ணர்வை
"நிலைபெறும்; நிச்சயம்;
நித்தியம்" என்பது -
ஐயோ, காதல்! காதல்!

அழிந்திடும் மேனி
அழகினி லாசை
நெளிவதைப் பெரிசாய்
நினைத்திட வைப்பது
ஐயோ, காதல்! காதல்!

கதைகளிற் சினிமாக்
கற்பனை உலகில்
சதைவெறி கொள்ளச்
சாத்திய மாவது -
ஐயோ, காதல்! காதல்!

கட்டிய மனைவியை
விட்டொரு பெண்ணே
தொட்டிடு மிருகமும்
"தோத்திரஞ்" செய்வது
ஐயோ காதல்! காதல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தே ன் மொ ழி"

** நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுச் சின்னம் **

**நிர்வாக ஆசிரியர்:** *தி. ச. வரதராாசன்.* **இணை ஆசிரியர் :** '*மஹாகவி*'

**அலுவலகம்:** *226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். இலங்கை*

**ஆண்டுக் கட்டணம்:** *ரூ. 3-00. தனிப்பிரதி 25 சதம்.*

**அச்சு:** *ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்,*

---

# புறஇதழ்

கட்டிளமை சொட்டுகின்ற கன்னிகையும், காதல்னும் ஒன்ற சேர்ந்தது போல, எமது உள்ளத்திலே தோன்றிப் பேராவலாய் நிறைந்த இரு எண்ணங்களின் சேர்க்கைதான் இந்த இதழ் - **"தேன் மொழி."**

கவிதைகளே மாத்திரமே தாங்கிய ஒரு இதழை வெளிக்கொணர வேண்டு மென்பது ஒரு எண்ணம்; **நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்கு** ஒரு நல்ல நினைவுச் சின்னம் உருவாக்க வேண்டுமென்பது மற்ற எண்ணம். இந்த இரண்டு எண்ணங்களும் சேர்ந்து 'தேன்மொழி' யை உருவாக்கி விட்டன.

ஈழத்தின் மறுமலர்ச்சிக் கவிவாணர்களில் முக்கியமான பலர் இந்த முதலாவது இதழை அலங்கரித்திருக்கிறார்கள்.

"பத்து வருடங்களுக்கு முன் பாடிய செல்வங்கள்" என்ற பகுதி தொடர்ந்து வெளிவரும். இன்று பிரபலமாக உள்ள பல கவிஞர்கள் பத்து வருடங்களின் முன்பும் - அவர்களிற் பலர் எழுத ஆரம்பித்த அந்தக் காலத்திலும் - எவ்வளவு அருமையான கவிதைகளை எழுதியிருக்கிறார்களென்பதை அந்தப் பகுதியில் பார்த்து வரலாம்.

*

இந்த இதழில் "படுத்துகிற பார்வை" என்ற கவிதையை எழுதிய **நாவற்குழியூர் நடராசன்** அவர்களை, ஈழத்தில் மட்டுமல்ல, தென்னிந்தியாவிலுள்ள வாசகர்களும் ஒரு நல்ல "கவிஞ"ராக அறிவார்கள். அவர் எப்பொழுதுமே இப்படித் தான். ஒரு புதுப் பார்வை பார்ப்பார். எடுத்துக்கொண்ட பொருளே நன்றாக மனத்திலே அனுபவித்து எழுதுவார். மிடுக்கான ஓசை நயம் அவருடைய பிறப்புரிமை. இதுவரை அவர் எழுதிய கவிதைகளைச் சேகரித்தால் ஒரு பெரிய கவிதை நூலாகப் பார்க்கலாம்.

பத்து வருடங்களின் முன்னால் மறுமலர்ச்சி? இதழை உருவாக்கியவர்களில் இந்தக் கவிஞரும் முக்கியமானவர் இன்று இக்கவிஞர் இலங்கை வானொலி நிலையத்தில் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாகக் கடமையாற்றுகிறார்,

*

மற்றைய கவிஞர்களையும் அடுத்த இதழ்களில் அறிந்து கொள்வோம். வணக்கம்

**- ஆசிரியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்மொழி

திங்கள் வெளியீடு

யாழ்ப்பாணம். ஐப்பசி,1955


## தமிழ்க்கடலே, எழுந்திடு!

பன்னிய புறமொழி விழைவெனுங் கங்குல்
பைப்பய விடிந்தது படரொளி பரப்பி
மன்னிய நின்புக ழாயிரஞ் சுடர்க்கை
வானவன் நாவெனு மலைமுக டுதித்தான்
துன்னிய புறமொழித் தாரகைச் சூழல்
சுடரொளி யவிந்தன குவிந்தனர் தொண்டர்
என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே

*

தேனெனப் பாலெனச் செழுங்கரும் பூறுந்
தீஞ்சுவைச் சாறெனத் தெள்ளமு தெனவே
மானன நோக்கிநின் வாய்மொழி கேட்டு
மகிழுபு புறமொழி மாந்தரும் வந்தார்
பூநனை புனைகுழற் பொன்னனை யாளே
பொற்சிலம் பலம்பிடு பூவடிப் பூவாய்
ஈனனை யும்மருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

- நவாலியூர்ச்
சோமசுந்தரப்புலவர்



ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு

ஐந்த டிக்கவும் அலுவல கங்களின் அந்தப்
பொந்து கள்திறந்தன, புறப் பட்டனர் மக்கள்;
வந்து நின்றனர் வரிசையில்; வண்டிகள் வரவும்
முந்து மா?வழி நோக்கிய "முளி" பிதுங் கினர்கள்!

அங்கு நிற்கிற மங்கையர் மாரது தெங்கின்
கொங்கை யிற்கொடு விழியினர் பலர்;கும ரிகளோ
தங்கள் அற்புதத் தாவணிச் சேலைகள் அயலாள்
கண்க ளிற்படக் கறுக்கும் அம் முகம்கண்டு களித்தார்!

ஆத லால் அவர் அழுதிடும் குழவியொ டருகில்
மாதொ ருத்திமன் றாடல்கண் டிலர்;ஒரு மனிதன்
பாதி கண்டவன், பழக்கமில் லாதவன் கொடுத்(து), "எப்
போதும் இத்தொல்லை பொறுக்கவொண் ணா" தென்று புகன்றான்!

உய்ய வேவிழைந் திரப்பதற் கொருப்படும் உளத்தன்
கையி லேந்திய குழந்தையின் கண்குரு(டு); அறியார்
"வெய்ய தேவிதி" எனவிளம் பினர்கள்; அக் கனவான்
"ஐயை யே" என அருவருத் தகலெனக் கடிந்தான்!

"இட்டு வாழ்பவர் இருந்திடில் இருநிலத் தினில் அம்
மட்டும் வாழ்ந்திடும் இரப்பெனும் இழிதொழில்; ஒற்றைத்
துட்டும் ஈந்திடல் துர்ச்செயல், துயரிடைச் சிலரை
விட்டு வைத்திட விரும்பிடு வோர்செயல்" என்றோ!

ஏது வண்டிவந் தது; அதன் இடுக்கினுள் ஏறும்
போதி லேபறி போயின் தவன்பணம்! பொருந்தாத்
தீதென் பார்கள் இத் திருட்டினை! வாழ்வது பிறரின்
ஈத லாலெனின் இறப்பதல் லால் இல்லை விளைவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி ல ம் பொ லி

கேட்குதுமணி ஓசைபோலக்
கிண்கி ணீர்என-எனை
வாட்டுமந்த வனிதைகாலின்
வளைசிலம் பொலி!

அள்ளுதென்றன் நெஞ்சை அச்
சிலம்ப ரற்றலே - மனம்
கொள்ளுதந்த நூபுரத்தில்
கோடி ஆசைகள்!

ஆடும் அந்த அமிழ்தின் நல்ல
ஆரணங் கடிக்-கிசை
பாடும் அந்த மங்கைகாலின்
பாத சங்கிலி!

கீதம்பாட வல்ல நல்ல
கிண்கி ணியதுன்-செம்
பாதம்சேர என்னடி-நீ
பாக்கியம் செய்தாய்?

யாவன்செய்ய வல்லன் இன்ப
யாழ்த்த மிழ் நங்காய்!- இளங்
கோவன் செய்து னக்களித்த
நூற்சிலம்பு போல்?

தங்கமேனித் தமிழணங்கே!
தாரணிக் கெழில்-உன்
பொங்குகாலில் மேவும் அந்தப்
பொற்சிலம் படி!

– நாவற்குழியூர் நடராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ ச ந் த ம்

சூரியன் கிரணங்கள் போர்த்தனன்
சுகந்த வ சந்தமும் தோன்றிற்று
மாரியின் கவலையும் நீங்கிற்று
மைந்தர்கள் யாருங் களித்தனர்
கூரிய வெண்பனிக் காற்றெலாம்
கொள்ளையிற் போயின; மாரியும்
சீரிய உன்னடி காண்டலும்
தயங்கி நின்று மறைந்ததே!

வெண்பனித் தாடிகள் மூடின
மெல்லத் தெரியும் ம ரமெலாம்
கண் துயில் கொள்ள முடியுமோ
காற்று மழையுங் குளிருமே
நண்பகல் தீயினைக் கிட்டியே
நடுங்கி நின்று ஒதுங்குவோம்
தண்புயல் நீங்கியே வானமும்
தரள மென்ன வெளுத்ததே!

கருமுகில் போர்த்திடும் இரவியை
காணும் வசந்த வரவுக்கு
மருவிய கடவுளை எண்ணியே
மங்கலப் பாடல் முழக்குவோம்.
பெருகிய காரிருட் போர்வையும்
பேயினைப் போல விலகிற்று
அருமையின் மாரியுங் கெட்டது
அதனை நம் நாடு கடத்துவோம்!

**("சாள்ஸ்ா ஒளியன்ஸ்" என்னும் பிரான்ஸ் தேசக் கவிஞரின் கருத்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வி. கி இராசதுரை

# கி ரா ம க் கா த ல்

*மானிப் பாயூர் மாங்கனி போல்*
*மல்கிச் சிவந்த கன்னங்கள்*
*காணக் காண என்காதல்*
*காட்டுச் சுரம் போல் ஆட்டுதடி!*

*வன்னிக் காட்டு வயல்களிலே*
*வளரும் பச்சைப் புகையிலைபோல்*
*மின்னும் பொன்னார் மேனியிலே*
*"மிதிலைக் காட்சி" தெரியுதடி!*

*மட்டக்களப்பு மண்ணீன்ற*
*மாரிப் போக நெற்கதிராய்ச்*
*சட்டை உருவிப் பூரிக்குஞ்*
*சடலங் கண்ணுள் ஆடுதடி!*

*பருத்தித் துறையின் பனம்பழமாய்ப்*
*பருத்துத் திரண்ட பாகத்தைக்*
*குறித்துப் பார்க்கும் என்விழிகள்*
*கொழுவித் திணற லாடுதடி!*

*சுன்னாகத்து வெயிலி னிலே*
*சுருண்டு காயும் ஓடியலதாய்*
*என்னாகத்தை வாட்டு தடி*
*எரியுங் காதற் சுரவாதை!*

*முத்தே, மணியே, மோகத்தை*
*மூட்டிப் பின்னர் கைவிட்டால்,*
*புத்தூர் ஆழக் கிணற்றுக்குள்*
*போய்வீழ்ந் துயிரை மாயேனோ?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போ டா தீ ர் எ ன் பா ட்டை!

"கன்னித் தமிழ்மொழியைக்
காத்து வளர்ப்பதென
எண்ணி ஒருமாத
இதழை நடத்துகிறோம்.

இந்த இதழுக்கு
எப்படியும் நீங்கள் ஒரு
நிந்தைக் கவி எழுதி
நிச்சயமாய்த் தாருங்கள்"

என்றென்னைக் கேட்டீர்!
என்ன கவிஎழுத?
பன்றிகள் கன் றீனுவதைப்
பார்த்திருப்பீர்; பாடலையும்

பன்றி போற் "பெற்றுப்
படைக்கின்ற" பாவலர்கள்
சென்ற வழியினிலே
சென்றால், நீர் கேட்டவுடன்

"இந்தாரும் பாட்"டென்
றெழுதி விசுக்கிடலாம்;
அந்தப் பழம் வழியை
அறியேனே; என்செய்வேன்?

"அங்கதமே வேண்டும்" என
ஆணையிட்டீர்; ஐயாவே,
இங்கதனை இன்றைக்கு
ஏற்பதற்கு யாருளரோ?

"வசைக்கவிதை மன்னர்களின்
வழிவந்த "தான்தோன்றி"
இசைக்கின்ற பாடல்களை
"எரி" என்று சொல்கின்ற

பேர்வழிகள் எண்ணிக்கை
பெருகி யிருக்குதையா!
("ஆர், எவர்" என் றெந்தனிடம்
அம்மாணைக் கேட்காதீர்!)

அன்றைக் குயிர் வாழ்ந்த
"அங்கதர்கள்" தப்பிவிட்டார்
இன்றைக்கவர் இருந்தால்
என்னகதி? நக்கீர

வேழத்தைத் தேடி
வெடிவைத்து வீழ்த்திடுவார்;
காளமே கத்தைக்
கழுவேற்றிக் கொன்றிடுவார்.

கலைவிளையும் தோட்டத்தில்
கள்ளி படர்ந்துவிடின்,
களை பிடுங்க வந்தவன் நான்
கண்டால், விடுவேனோ?

"நல்லபணி" என்றி தனை
நான் சொல்வேன்; நீர்சொல்வீர்
சில்லறைகள் மட்டுந் தான் சீறி
சீறியெழுந் தார்ப்ப ரிப்பர்.

"குத்து-வெட்டு- கொல்" என்று
கொக்கரிப்பர் பாவம்-அவர்
வெத்து வேட்டெல்லாம்
விளங்காதோ எங்களுக்கு?

எல்லாம் அறிவோம் நாம்!
என்றாலும் உங்களுக்கேன்
பொல்லாப்பு?- உம் இதழில்
போடாதீர் என் பாட்டை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னருமை தெரியாதா?

எங்கே தமிழ்மன்னர்? எங்கேயெம் எழுத்தாளர்?
சங்கேயேன் நீயூதாய்! சல்லரியேன் தட்டாயோ!
வண்ணப்பட் டாடைநீ வந்தென்னைப் போராயோ!
எண்ணாத பொற்கிளி நீ என்கைக்கு ளாகாயோ!
வாசமலர் மாலை நீ வந்துகழுத் தேறாயோ!
ஓசை பெருக்கியெனை யுலகெங்குஞ் சொல்லாயோ!
மூவேழு வேட்டு முழங்கும்பீ ரங்கியெங்கே?
மாவேழு பூட்டும் மணித்தேரு மெங்கேயோ?
சச்சைச்சா யிங்கு தமிழருமை தெரியாதா?
சிச்சிச்சீ யிந்தத் செகத்தீரே பாரீரோ!
என்னையா விடியமுனம் ஏறிவிட்ட தோதலைக்குக்
கொன்னை தட்ட வேண்டாம் கூறுமையா சங்கதியைச்
சொல்லட்டா சொன்னாற் துடிதுடிக்க மாட்டாயா?
இல்லையப்பா சொல்லுன் இருதயத்தைத் தடவுகின்றேன்.
வந்துவந்து நான் நான் நான் வார்த்தையிலே சொல்லட்டா?
மந்திரமோ கிந்திரமோ வாயடைத்து விட்டதுவா?
விந்தை யொன்றுமில்லை விளம்புகிறேன் கேளுமையா!
என்பாட்டில் நேற்றே யிருந்த விடத்தினிலே
வெண்பாவா யொன்றை விளித்தெழுதி விட்டேனையா!
நேருக்கு நேர்மோனை நின்றிறங்கு மேயெதுகை
ஆருக்குத் தானென அருமை தெரியுமையா!
குத்தித் தலையிற் குறைதீர்த்த சாத்தனுமே
செத்துவிட்டான் நாங்கள் செய்த தவப் பாக்கியமே
இன்றிருந்தால் மூன்று கணத்திற்கு மேலிருக்கத்
தென்புமவர்க்கெழுமோ செப்பிடுவீர் செகத்தீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி ஒறுத்த மாந்தர்

நீலக் கடலின் உதரத்தில்
நீங்கா விருள்சேர் குகைமறைவிற்
கோல மணிகள் குவைகுவையாய்க்
கொட்டிக் கிடக்கும், யாரறிவார்?
ஞாலத் தழகார் நறுமலர்கள்,
நயக்கும் கண்ணுக் கெட்டாமற்
பாலைக் காற்றில் மணம் போக்கிப்
பயனற் றழியும், அறிவார்யார்?

கல்லா மக்கள்; கலை நூலைக்
கண்ணாற் றானுங் கண்டறியார்;
வல்லார் ஏத்தும் அறிவென்னும்
வனிதை அருளின் சுவையறியார்;
பொல்லா வறுமைப் பிணிஎண்ணம்
பொங்கா வண்ணம் நசித்துவிடக்
கல்லாய் மரமாய் உணர்வொடுங்கிக்
காலங் கழிப்பார் புவிமீதே.

பேரும் புகழும் இல்லாதார்;
பெருமை பேசும் வாயில்லார்;
யாரும் நாடாச் சிற்றூரார் ;
எனினும் இவருள் ஒருவேளை
காரும் வெள்கக கவிபொழியும்
கம்பன் ஒருவன் வாழானோ?
வீரம் பயிலார் இவர்தம்முள்
வீமன் ஒருவன் வாழானோ?

கூட்டம் கூடி இவர் பெருமை
கூறும் மக்கட் குழாமில்லை;
ஆட்டம் பாட்டோ டெதிரேற்பார்
ஆரும் இல்லை; இவர் பேச்சைக்
கேட்டுக் களிக்கச் சபையில்லை;
குணம்பா ராட்டக் கவியில்லை;
வீட்டுக் கப்பாற் புகழ் போக்கார்,
விதியால் வீழ்ந்தார் இவரம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வாழ்வால் மலராதிங்(கு)
அரும்பில் அழியும் ஆற்றலினார்
எடுத்த நடையும் பீடுமிலார்;
என்றும் படுத்த உளமுடையார்
குடத்துள் வைத்த விளக்கே போற்
குணங்கள் வெளிப்பா டெய்தாமல்
நடத்தும் வாழ்க்கை தனைக்கண்டு
நகைப்பார் ஞானம் இல்லாரே!

சிறப்பும் சீரும் செல்வாக்கும்
தேடித் திரியார்; தினந்தோறும்
உறக்கம் இல்லா திரவுபகல்
ஓடார் பணத்தின் பின்னாலே!
புறத்தும் அகத்தும் பொருந்தாத
பொய்மை வேடம் பலபூணார்;
அறத்தைக் கொல்லார்; பழியஞ்சி
அகந்தை கழிய வாழ்வாரே.

மனத்தைக் கல்லாய் மாற்றார்; தம்
மானம் விற்றுப் புகழ்வாங்கார்;
நினைத்த வெண்ணம் நிறைவேற்ற
நியாயம் தன்னைக் கொலைசெய்யார்;
கனத்தைப் பணயப் பொருளாக்கிக்
காமக் களவுச் சூதாடார்;
இனத்தை அழிக்கும் பழியெண்ணார்;
இறைவன் உண்மை மறவாரே,

ஆசைக் குதிரை தனைப்பூட்டி
அதிகா ரத்தேர் ஓட்டும் நீர்
"காசைப் பொருளைக் காணாதார்;
கல்வீட் டிருக்கை அறியாதார்;
தேசைத் தேடும் முயல்வில்லார்;
செயலில் நுகர்வில் உயர்வில்லார்;
கீசப் பிறவி மாக்கள்" என -
நிந்தித் திவரை நகையீரே!

(ஆங்கிலக் கவிதை ஒன்று தூண்டிய சிந்தனைகள் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி நம்பிக்கை

புத்திரன் பிறந்தால் புத்திக் கூர்மை
மெத்தவே அவனிடம் மேவுதல் வேண்டும்
என்றே எவரும் எண்ணுவர், ஆயின்
யானோ எனது புத்தியின் கூர்மையால்
வாழ்க்கை முழுவதும் வரண்டு கிடக்கிறேன்.
இன்றென் நினைவு ஒன்றே யாகும் -
என் சிறு பிள்ளை நன்கு வளர்ந்து
அறியாமையிலும் மடமைச் சிறப்பிலும்
எவர்க்கும் குறைவிலா திலங்கி அமைதி
நிலவும் வாழ்க்கை நீள நடாத்தி
ஈற்றில் இந்த நாட்டை இயக்கும்
மந்திரி சபையிலும் குந்தியிருப்பான்
என்ற ஆசை ஒன்றே
என்னுளம் மன்னி இருப்பது வாமே!

(ஒரு சீனக் கவியின் தமிழாக்கம். எந்த இலங்கை மந்திரியையும் குறிக்கவில்லை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்று விட்டாள்!

வானத்தின் கீழே
வரண்ட மணற்பரப்பில்
தேனொத்த மென்காற்றுத்
தீண்ட, மகிழ்ந்திருந்தேன்.

எண்ணக் குகையில்
இருந்த பெருங்காதல்
சன்னத்த மாகிச்
சதிராட, வண்ண த்தின்
பூச்சு முகம்பொலிய
புன்முறுவல் காட்டி அந்தப்
"பீச்"சிலே வந்தாள் அப்பெண்!

சொருகவிழ்ந்த கூந்தலினைத்
தொங்கவிட்டு, முல்லையொடு
மருக்கொழுந்து சூடி
மணங்கமழச் செருக்குடனே
அன்ன நடை தோற்கும்
அழகு நடை ஒன்றுடனே
என்னிடத்தை நாடினாளே!

"உன்னிதயம் கொண்ட
ஒருத்தியுடன் பேச்சாட
என்ன தயக்கம்?"
எனும் எண்ணம் கன்னியிடம்
நன்று சிலகூற
நடத்திடவும், "ஒன்று கதை"
என்றேன்; இருந்தாள் அவள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடுத்த தெருவில் உனை
அன்று கண்டேன்; அன்றுதொட்டுப்
படுத்துகிறாய் காதற்
பழிகாரி! உடுத்தழகு
காட்டுகிறாய்! காட்டாயோ
கடைத்தேற ஒருவழி? என்
வீட்டுக்கு வந்துவிளக் கேற்று!"

என்றேன்; சிரித்தோம்!
"இனிப்பாகப் பேசுகிறீர்
என்னதொழில்?" என்றாள்; நான்
ஏங்கினேன்! ஏங்கிப்பின்
பண்ணு தொழில் தமிழிற்
பாட்டெழுதல்! ஆனாலும்...
என்றுரைக்கா முன்னம்
எழுந்துவிட்டாள்! மெய்யாக
மன்றலினா லேகாதல்
மாய்வதுண் டென் றேநடந்தாள்!
சென்றுவிட்டாள் அச்சிவப்பு மாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகையன்

# பு கை ஞ ர்!

ஊதுகிற இறையிலெனா உள்ளிருந்து நெடுவான
வீதியிலே புகைக்கோளம் புடைசூழ வீற்றிருந்தார்;
"வேத மொழி" பேசுகிற மேலவரின் திருவடியைக்
காதலொடு தலைவணங்கிக் கைகுவித்து நிமிர்ந்தேன், நான்.

நீண்டசிகை; நிமிர்ந்த உடல்; நெஞ்சினிலே செருமல்வகை
பூண்டஉடை மேல் நாட்டுப் புனிதஉடை; பொக்கெற்றில்
வேண்டிய போதில் உடனே வெளிவருமோர் கைக்குட்டை
ஆண் தகைமைக் குதாரணமாய் அவர் இருந்தார் நிம்மதியாய்.

பத்திரிகைச் செய்திகளிற் பதிந்தவிழி இணைகள்; பிற
எத்தகைய எனக்கவலை எய்தாத மனநிலைமை
மெத்து புகை சுங்கானால் உள் இழுத்து வெளிப்படுத்தும்
வித்தகவிற் பனத்தொழிலில் மெய்ம்மறந்து வீற்றிருந்தார்.

"வெறிவிலக்கைச்" சட்டத்தால் விதிக்க நினைக் கின்றார்கள்
அறிவுமிக்க பெருந்தகையீர்! அதனையிட்டுங் கள் கருத்தைத்
திறமைமிக்க சொல்லறிந்து செப்பிடுவீர் எனக்கேட்டேன்
கறகறக்கச் செருமிவிட்டுக் கவின் சிரிப்போ டோ துகிறார்.

"கற்பூர வாசனையைக் கழுதை அறிந் திடவசமோ?"
பொற்பாரும் "பொயிலை" மணம் புல்லர் அறியார்; முனைந்து
நிற்பார்கள் தடைவிதிக்க; நீசர், - துளி அறிவுமிலார்
கற்பாறை மண்டையர்கள்; கள்ளினுக்கே தடையாமே!!

போதை தரும் புகையுடனே, புனிதமண மதுவகைகள்
சாதுகளின் புலன்களுக்கும் தடைவிதித்து நிறுத்திவிடும்
மேதைகளின் புகலான மேலுலகம் அவைதாமே!
காதைகளும் கவிதைகளும் காவியமும் அவையளிக்கும்.

இவ்வாறு சொல்லிவிட்டே, இன்னுமொரு முறைபுகையைச்
செவ்வாயின் வழிஉறிஞ்சிச் சிந்தித்தார் அவர் மொழியில்
எவ்வாறு பிழைகாண்போம்? இவ்வுலகம் இவருடைய
நல்வார்த்தை தமைக்கேட்டு நடந்திடட்டும் இவர்நெறியில்.

"கள்ளினுக்கா தடைவிதிப்பார்? கஞ்சாமென் னறும்புகையை
எள்ளளவும் சட்டத்தால் ஏமாற்ற முடியாது
கள்ளவழி வாழுந்தான்" எனஉரைத்தார் "ஒரு"புகையை
உள்ளிழுத்தார் பல்லிளித்தார், உவகையிலே புகைக் குடிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவல்

"கொக்கொரக்கோ கொக்கொக்
கொக்ரக்கொக் கோ" வென்று
அக்கொடிய ராட்சதரின்
வீட்டரு கால் - மிக்க
எக்களிப்பால் ஆனந்தப்
பண்பாடிப் பேடையொடு
அக்கணமே வந்தது அச் சேவல்.

"கண்நிறைந்த என் அன்புக்
காதலரே காமமொடு
எண்ணிறந்த பல்லாண்டு
நாம் வாழக் - கண்ணியமாய்க்
காத்தருள்வான் எங்கள்
கடவுள் கவலையெலாம்
தீர்த்தருள்வீர்" என்றது அப் பேடு.

"இன்றே நான் கண்டேன்
இதமான சேவலிதைத்
தின்றே நான் என் பசியைத்
தீர்த்திடுவேன்" - என்றங்கே
சிந்தித்தான் அந்தத்
தீயோன் அதுகண்டு
அஞ்சிற்று அச்சேவல் மிக.

ஐயோ எனைக்கொல்ல
வருகின்றான் அம்மனிதன்
பொய்யில்லை உண்மை இது
பார்கண்ணே- மெய்யாய்
இன்றென் உயிர்போவ(து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை இனி நான்வாழேன்
என்றது அப் பேடைக் கது.

அப்பொழுதப் பொல்லா
அரக்கன் அச் சேவலினைக்
கைப்பிடித்தான் ஓடி
அதுகளைக்க, -வெப்பம்
பொங்கி எழ அம்மயிலைப்
பொன்சேவல் கூறிற்று
அங்கிருந்து இவ்வாறாய் ஏங்கி

நேற்றேயென் கல்யாணம்
நேர்த்தியோடு பூர்த்திசெய்து
வீற்றிருந்தேன் காதல்
வீரனென- கூற்றமென
வந்த பகுத்தறிவுப்
பதரே! உன் மானிடந்தான்
எந்தவிதம் மேலெனவும் கூறு?

நான்போகின் றேன் சொர்க்கம்
நன்றே நீ வாழ் இனிமேல்
ஊன் தின்று ஊனைப்
பெருக்காதே-ஏனெனில்கேள்
அம்மா என அலற
எம்குலத்தைச் சாகடிக்கின்
சும்மா விடாதெங்கள் ஓலம்.

நீ சிறிது யோசி
நின்மனையும் என் மனைபோல்
வீதியிலே வாழின்
விரும்புவையோ - நீதி
எவர்க்கும் பொது, ஆனால்
என் குலம் இங் கே அலையச்
சுவர்க்கம்போகின்றேன் தெரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தே ன் மொ ழி"

** நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுச் சின்னம் **

**நிர்வாக ஆசிரியர்:** *தி. ச. வரதராசன்.* **இணை ஆசிரியர் :** *'மஹாகவி'*

**அலுவலகம்:** *226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். இலங்கை*

**ஆண்டுக் கட்டணம்:** *ரூ. 3-00. தனிப்பிரதி 25 சதம்.*

**அச்சு:** *ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்,*

# *பு ற இ த ழ்*

*"தேன் மொழி" யின் முதலாவது இதழுக்குக் கிடைத்த பாராட்டுக்களினால் நிறைந்த உள்ளத்துடன் இந்த இரண்டாவது இதழை நேயர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். பல அன்பர்களின் பாராட்டுகள் கூடக் கவிதை உருவில் கிடைத்திருக்கின்றன. உதாரணத்துக்கு ஒன்றே ஒன்று தருகிறோம் :*

*"படுத்துகிற பார்வை முதற் காத லீறாய்*
*அடுத்த தமிழ்க் கவிதைத் "தேன் மொழி"வந் தென்னை*
*எடுத்தினிமைக் கடலில் எறிந் தாழ்த்தி யாழ்த்திப்*
*படுத்துகிற பாடுதான் பெரும்பா டன்றே"*

*-விடிவெள்ளி,*

***

*அன்பர்* **அ. ந. கந்தசாமி** *அவர்களை ஈழத்து வாசகர்கள் நன்றாக அறிவார்கள். சிறந்த கட்டுரைகள், கதைகள், நாடகங்கள் புனைவதோடு நில்லாமல் கவிதைத் துறையிலும் புகுந்துள்ளவர் இவர். ஓசை அழகிலும், சொல் அழகிலும் அதிக கவனம் செலுத்திப் பொருளழகைக் கை தவறவிடும் பல கவிஞர்கள் போலல்லாமல், கருத்துச் செறிந்த கவிதைகள் தருபவர். "கவீந்திரன்" முதலிய பல புனைபெயர்களிலும் எழுதியிருக்கிறார். சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் கடமையாற்றியவர். இப்போது அரசாங்கத்தின் தகவற்பகுதியில் மொழி பெயர்ப்பாளராக விருக்கிறார்.*

***

*"எதை எழுதுவோம்" என்று ஏங்கிக்கொண்டு, எண்ணம் ஓடாமல் சோம்பிக்கிடக்கும் கவிஞர்களுக்கு ஓர் "அடி" கொடுக்கிறோம். வெண்பா ஒன்றின் ஈற்றடியே அது! இதோ :* **"வேசிக்கும் உண்டோ விருப்பு!"** *- இந்த அடியை வைத்துக் கொண்டு தனி வெண்பாக்கள், யாத்தனுப்பும்படி நேயர்களைக் கேட்டுக்கொள்கிறோம். பிரவேசக் கட்டணம் எதுவும் கிடையாது! எனவே பரிசுகளும் கிடையா! ஒருவர் எத்தனை பாக்களும் அனுப்பலாம்! தரம் பார்த்து பரிசு வழங்கல் கிடையா தாகையால், "பெரிய கவிஞர்"களும் தயங்காமல் பங்குபற்றலாம்! கிடைத்தவற்றுள் சிறந்தவை அடுத்த இதழில் பிர சுரமாகும். வணக்கம்.*

**- ஆசிரியர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்மொழி

திங்கள் வெளியீடு

யாழ்ப்பாணம். கார்த்திகை,1955

## அல்லலைத் தீர்க்க அறிவு வராதா?

செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்
தெய்வத் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமி லெம்மொழி மாதா-படும்
அல்லலைத் தீர்க்க அறிவுவ ராதா
முச்சங்கத் தரியணை யேறி - மன்னர்
முடிதொட்ட மூவரும் அடிதொட்டுப் போற்ற
விச்சையா லரசாண்ட மாதா- அவள்
வேதனை தீர்க்க விரக்கம்வ ராதா
இன்னமு தோதொளி தேனோ-என
எஞ்செவிக் கினிக்கின்ற மொழியெது தானோ
அன்னை மொழிதனை நாமோ - வெறுத்
தருவருத் தவமதித் திடலழ காமோ
சிந்தையிற் றேனமு தூறி - நாவில்
தித்தித்துத் தித்தித்துச் செவிவழி யேறி
வந்து கனிந்திருள் கீறி - எம்மை
வாழ்விக்கும் மொழியினை மறப்பதோ மீறி

- நவாலியூர்ச்
சோமசுந்தரப்புலவர்

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழ்

# நான் செய்த நித்திலம்

வானிலோர் முத்தினை வைத்திழைத் ததுபோல்
வளர்மதி தவழ்ந்தது. மாடியின் மீ துயான்
இப்பி ஒன்றில் முத்தொன் றிட்டனன்.
இப்பிமு டிற்று, ஈரைந்து மாதம்
கழிந்தது. கழிந்தபின் என் மனை விளங்கக்
கண்ணன் போலொரு கனிவாய்க் குழந்தை
வந்தது. வந்தபின் வாணிலா முகத்தென்
மனையாள் அதைஎன் மடியிடைக் கிடத்தி
ஈரைந்து திங்களின் முன்னால் ஒருநாள்
நீங்கள் செய்த நித்திலம் இதுவே
என்று கூறி மகிழ்ந்தனள். அவள் கண்
ஓரங் கண்டேன். ஒளிமுத் தொன்று
அங்கு துடித்ததும் கண்டனன். அவள்விழி
தொட்டேன். முத்துத் தீய்ந்தது. மகிழ்ச்சியில்
உள்ளத் திப்பியில் உதித்துக் கண்வழி
வந்தவம் முத்தில் வையகத் தின்பம்
யாவும் கண்டனன், அம்முத் தெனது
மடியிடைக் கிடந்த மணிமிசை விழுந்திட
மணியை எடுத்துயான் மலர்க்கரம் தடவி
உச்சி மோந்து உளம் மகிழ்ந்திட்டேன்.
நான்செய் நித்திலம் தேன்செய் ததுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த டு த் த து யா ர் ?

தென்றல் உலா விச்செல்லும் செழித்ததோப்பில்
தேனுண்டு கவிபாடித் திரியும் வண்டாய்
என்றும் நான் இருந்திடுவேன் இயற்கையன்னை
இனியமலர் நீரோடை எழுந்துவானில்
சென்றாடி மரக்கிளையில் சிறகுகோதி
திளைத்திருக்கும் சதிபதிகள் அணிலின் கூட்டம்!
என்றிவற்றின் எழிலெல்லாம் எடுத்துண் என்பாள்
என்னி தயப் பசி நீக்கத் தடையே இல்லை.

எங்கெங்கே அழகுண்டோ அங்கே எல்லாம்.
என் கண்கள் சென்றுவிடும் செயலும் ஓய்வேன்
சங்கீதத்(து) இசைகேட்டால் தமிழின் இன்பச்
சார்புள்ள கவிகண்டால் எனை மறந்து
பொங்குகிற மகிழ்ச்சியிலே பொலிந்து நிற்பேன்
புதுமையல்ல யாருமெனைத் தடுப்பதில்லை.
அங்கொருநாள் அவளை நான் வெளியிற்கண்டேன்
அழகிற்கோர் எல்லையிதோ என்று நின்றேன்

புது நிலவின் ஒளிகண்டேன் வசந்தகாலப்
பொன் மலரின் பொலிவுகளும் கண்டேன் தென்றல்
மெதுவாகத் தரும் தண்மை உணர்ச்சிகண்டேன்.
மேன்மேலும் கலையுள்ளம் துருவி ஆய்ந்த
நிதியெல்லாம் அவளிடத்து நேரிற்கண்டேன்
நில்லாமல் விழியம் பொன் றெடுத்துவீசி
மிதியாமல் நிலத்தின் மேல் விரைந்து செல்லும்
மென்னடையும் அழகென்றால் வேறென் சொல்வேன்.

மலைமலையாய்ச் சோலைகளாய் வானம் மீதாய்
வளருகின்ற வனப்பெல்லாம் தேடித்தேடி
அலைவுற்றேன் அதோ எந்தன் அழகுத்தெய்வம்;
அரும்பசிக்கு நல்லமிர் தம் ஆஹா! என்றே
கலையுள்ளம் களிப்படையும் போதில் ஆங்கே
கன்னியவ ளைப்பார்த்துக் கலங்கிடாதே
சிலையாகி நிற்காதே சிரிப்பார் மற்றோர் .
சென்றுவிடென் றுள்ளிருந்து தடுத்தார்யாரோ!

– "கதிரேசன்" ("கிராம ஊழிய"னில் வெளியான கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி ரி வு

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளெல்லாம் மாணாப்பிறப்பு - வள்ளுவர்

**அவன்:**

*மண்ணிற் தனியரசும், மாறா நவநிதியும்,*
*எண்ணிப் பெறுஞ்சுகங்க ளெல்லாம் கிடைத்தாலும்,*
*விண்ணிற் கிடையா விருந்தே! என திரண்டு*
*கண்ணைப் பிரிந்திடவும் கருத்தில் நினைப்பேனோ?*

**அவள் :**

*ஊனியைந்த கண்ணின் உருவை மதித் தீரோ?*
*பூநனைந்த தோற்றப் பொலிவையுளங் கொண்டீரோ?*
*நாநனைந்த தேன்மொழியால் நான் பிரியே னென்றதெல்லாம்*
*பாநனைந்த கற்பனையின் பசப்பன்றி வேறுளதோ?*

**அவன் :**

*போகத் திருக்கோயில் பொலியுந், தமிழணங்கே!*
*தாகத்தைத் தீர்க்கவரும் சருபத்தே! பனிநீரே!*
*சாகத் தவங்கிடப்பேன! சத்தியமுன் செவ்வி தழின்*
*யோகத்தை யான் பிரிந்தால் உயிரே பிரியுமன்றே!*

**அவள் :**

*கண்ணுங் குழிசெறியும்; கதுப்பும் நரைத்தொழியும்;*
*தண்ணென்றசெவ்வி தழும் சலித்துயிர்ப்புத் தேய்ந்துலரும்*
*புண்ணியத்தின் பொலிவென்று புகழ்ந்துளவென் சாயலெலாம்*
*மண்ணிற் கலந்துவிடும்! மற்றெதையென் னிற்பிரியீர்?*

**அசரீரி:**

*நன்றறி யாதவிந் நகரத் திளைஞரே!*
*ஒன்றுமக் குரைப்பேன், உளங் கொள்வீரே;*
*மால்கொண் டுறங்கும் மன்பதை, யறத்தின்*
*சாலங் காட்டித் தவித்திடு மிருளில்*
*படியரி சிக்குப் பகல் முழு துழைக்கும்!*
*நடுநிசி வரைநகர்ச் சினிமாக் கோவில்!*
*வேகந் தணிய யோகம் பலவுள!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக் கிழமையில் வேண்டுங் கடவுளின்
பள்ளியில் நின்று பரவுமா சாரம்!
கடவுளு மங்கே காட்சி யளிக்கும்!
அடியவர் கூடி அரகராச் சொல்வர்!
கப்பலில் வந்த கலையும் பண்பும்
எப்பொழு தும்மவர்க் கின்பந் தருமே!
விடுமுறை நாளில் வேண்டிய பெய்த
மோட்டா ரேறி முனீஸ்வரம் செல்வார்;
ஆடியும் பாடியும் அரற்றியும் மகிழ்வார்;
பக்தியை வளர்க்கும் பண்புக ளிவைதாம்!
தமிழ் தழைத் திடத்தாம் சங்கங் கூடுவர்
சங்கமெங் கும் பிர சங்க மாரி!
மாதமும் மாரி தமிழ்வளம் மல்கும்!

**அவள் :**

மாளாத் தமிழ்தந்த பெருவாழ்வன் மாண்பெல்லாம்
நாளாக நாளாகப் பிரியாது பிரிந்தனையே;
நாளாக நாளாகப் புதுமைநலம் பாழாகக்
கேளாத நெடுஞ்செவிகள் கேட்கவென ஊதினரே!
காதுஞ் செவிடோவுன் கண்பொட்டையான துவோ?
ஏதுஞ் சுகமில் புறவெழில்கண் டுணர்விறந்தீர்!
வாது புரிந் தென்னோடு வம்பிழைக்க வேண்டாம் நீ
போது புறம் பிரிந்து பொய்மயக்கம் தீர்வதற்கே!

**அவன் :**

உன்னாணை யென்கனியே, யுத்தமியே, யுன்னை நினைந்
தென்னாவி சோருகிறேன், என்னே விபரீதம்,
சொன்னாலும் நம்பு தியோ! தூரவச ரீரியென்
முன்னே சொன் னால தனை முடித்துத் தொலைத்திருப்பேன்!
வாயாற் தமிழணங்கே வற்றாத நின்புகழை
ஓயாமற் கூறியெங்கும் ஒலியைக் கிளப்பிடுவேன்;
தோயாத நின்சால்பு தோய்ந்திடநர னெப்பொழுதும்
மாயாத நின்பெருமை முற்றாய் மறந்திருப்பேன்!

**அசரீரி:**

நல்ல தன் நலனை நாடா மாந்தர்
அல்ல லுழப்பர் அரும் பிரிவாலே.
யாமே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகே, நன்மை, உண்மை , என வரூ உம்
பழகிய மூன் றன் பான்மை தெரியாது
கலைமாத் திருவிற் பிரிந் தஞர் கொண்டனம்;
மண்மகன் இன்று விண்மகட் பிரிந்தான்!
உலகிற்,
போகமுந் திருவும் பொருந்தா வாயின!
ஆக்கமுங் கேடும் பிரிவால் வரு தலின்
நலந்தரு பிரிவை நாம்வேண் டுவமால்
புலந்தரு வாழ்வு புகு தரற் பொருட்டே!

---

- திருமணம், புதுமனை புகல் முதலிய விழாக்களிலெல்லாம் "வாழ்த்துப்பாக்கள்" பாடி வழங்கல் இன்று தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சியாக இருக்கின்றது. ஆனால், அந்தோ ! அவற்றிற் பல "கடன் வழிச் செய்யுள்களாய், உள்ளத்தை மாத்திரமன்றிச் செவிகளையும் நோகச் செய்கின்றன. அவற்றுக்கிடையிலே அருமையாகச் சில கவிதைகள் -"இன்பத்தேனாக" வந்து பாய்வதும் உண்டு. அவ்வழி வந்து இனிக்கின்ற மூன்று வெண்பாக்களைக் கீழே தருகிறோம் புலவர் மகன் பண்டித இளமுருகனார் அவர்களுடைய சொல்லோவியம் இவை:

○ செந்தா மரைத்தாள்கள் சேப்ப நடந்தமுதம்.
சிந்தி மகிழ்வூட்டுஞ் செல்வரொடு -சந்ததமும்
இன்பார் "ஜெயகான" இல்லிருந்து வாழியரோ
நண்பார நல்லோ ருடன்.

○ திருமகள் வைகித் திருவெட்டும் நல்க
மருமகள் கல்வி வழங்க - வருமயிலோன்
ஊறின்றிக் காக்க வுயர்ந்தென்றும் வாழியரோ
"பேறு பதினாறும் பெற்று.

○ அன்பு பெருக அறந்தழைக்க வாருயிர்கள்
இன்புபூத் தென்றும் இனிதோங்கத் - துன்பின்றிச்
சங்கத் தமிழ்போற் றழைத்துப் புதுமனை யில்
மங்கலமாய் வாழி மகிழ்ந்து .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா ரி க் கொ ள் !

பாராட்டிச் சீராட்டி உன்னை - தமிழ்
படியென்று சொன்னாளே பலகால்உன் அன்னை;
வேல்விட்ட புண்போல் அ துன்னை-ஏனோ,
வேதனை. செய்கின்ற தென் செல்வக் கண்ணே
ஆல்போல் தழைத்திட்ட இன்சொல் - தமிழ்
அமுதுண்ண நீ ஆர்வம் கொள்ளாத தென்சொல்!
பால் என்று சொன்னாற் பொருந்தா - தமிழ்
பாகென்று சொன்னாலா பாதி பொருந்தா;
கால் என்று சொல்வேன் என் வாழ்வின் - ஏன்,
கதி என்று சொல்வேன் எத் தமிழர்க்கும் வாழ்வில்
மால்கொண்டு நீயேன் மருண்டாய்?- பிறர்
மாய்மாலங் கண்டாசெந் தமிழாகா தென்றாய்!
சூழ்கொண்ட மேகங்கள் போலே - அறிவு
சுடர் கொண்டு கவிகின்ற தெந்தமிழ் மேலே;
கோல்கொண்டோ கற்கண்டைத் தின்ன-யாரும்
கொடுப்பார்கள்? தெவிட்டாதே தமிழ்தின்னத்தின்ன"
மேல் வந்து வாரிக்கொள் நன்றாய்!-இங்கு
மேலான புலமைக்குப் புகழுண்டு கண்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வேசிக்கும் உண்டோ விருப்பு?"

பட்டத்துக் காகப் பகல்வேடம் போடுவோர்க்(கு)
எட்டுணையும் உண்டோ இனப்பற்று?- பொட்டிட்டுப்
பூசிப் புனைவாள் பொருளே, குறிக்கோள் ! அவ்
வேசிக்கும் உண்டோ விருப்பு !

– முருகையன்.

அணைவாள் எவரையுமே; அங்கமெலாம் ஈவாள்;
பிணமும் தழுவிப் பெறுவாள் - பணமாயின்!
நேசிப்பாள் என்று நினைத்தீரா? போம் போம்! அவ்
வேசிக்கும் உண்டோ விருப்பு!

– சோ. சண்முகபாரதி.

பீடில்லாத் தன்னலத்தின் பின்செல் தலைவரிடைத்
தேடிடினும் தென்படுமோ தேசபக்தி? - கேடுகெட்ட
காசுக்கு மானம் கடைத்தெருவில் விற்கும் ஒரு
வேசிக்கும் உண்டோ விருப்பு!

–அ. ந. க.

ஆனவரு வாய் அனைத்தும் அன்னவளுக் கீந்தாலும்,
வேண பணிபுரிந்து வேர்த்தாலும் - மானிடனே
மாசில்லா அன்பு மலருமோ? மெய்மரத்த
வேசிக்கும் உண்டோ விருப்பு?

–"ஔவை"

அவளுக்கு என்ன! ஆயிரமா யிரம்ரூபா
தவளு மவள் கையில்! தாலிபல!- இவளுக்கா
காசுக்கு ஆசை?- கற்பரசி! "வீசுபுகழ்
வேசிக்கும் உண்டோ விருப்பு?

–ச. பஞ்சாட்சரம்

பொய்யை வளர்ப்பார்; புனைசுருட்டால் வாழ்வார்; தாம்
உய்யப் பிறர்வாழ் வுறுஞ்சுவார்!- வையத்தார்
காசுக்கு விற்காக் கருத்துண்டோ ? கற்பில்லா
வேசிக்கும் உண்டோ விருப்பு!

–"பண்டிதர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழச் சுறா, அந்தப், பாழும், வெகுபசியால்
ஆழக் கடலில், ஒரு இரை தான்- வீழச், சந்
தோசிக்கும், தீனியெனத் தூண்டிலினைக் கொத்தவர
வே, சிக்கும். உண்டோ விருப்பு?

- மிருசுவில், அரி அரன்.

பத்தரைப்பொன் மேனிப் பதிவிரதை நானிருக்கச்
சத்துறுஞ்சும் சண்டாளி சாகசத்தால்- பித்தாகி
நாசமாய்ப் போகாதீர், நாயகரே! நும் மாட்டு
வேசிக்கும் உண்டோ விருப்பு!

–பரிமளா

காமத்தால் பொங்காத கட்டுடலாள், கண் பனிக்க
"ஆம், அத்தான் என் உயிர்!" என் றாடுவளா? - சாமத்தில்
பூசி மினுக்கிப் புறப்பட் டுலவிடுவாள்
வேசிக்கும் உண்டோ விருப்பு!

– வி. கி. இராசதுரை.

பெற்றாள் தமிழ்நாக்காற் பேசாமற் சிங்களத்தைக்
கற்றிடுவீ ரென்று சழறுவோர்-உற்றுணராத்
தேசத் துரோகிகள்! தேடிப்போய்க் கொண்டாடும்
வேசிக்கும் உண்டோ விருப்பு?

–"யுவன்" பொத்துவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ ணை யி டு தா யே !

தமிழ்மொழியும் தாய்நாடே! உன்னைக் காக்கத்
தலை அரிந்து தருவேன்! என் தாலி பூண்ட
அமிழ்தனைய துணையாளைப் பிரிவேன்! ஆடும்
அலைகடலிற் குதிப்பேன்! உன் அன்பிற்காக
உமி, தவிடே என்றாலும் உண்டு வாழ்வேன்!
உதிரமெலாம் உன்னுடல்மேற் சிந்திக் காப்பேன்!
“சமதையிலை” என்றுன்னைத் தாழ்வு சொன்னால்,
சாவெனக்குச் சிறு தூசு! சகியேன் அம்மா!

மாதா! உன் மடியிற்பால் குடித்த வாயால்,
மரணத்தால் விழமட்டும் புகழ் வேன்! “நீயே
ஆதாமும் ஏவாளும் பெற்றெடுத்த
ஆதித்தாய்” என்று துதி பேசும் பேச்சுப்
போகாது! உன் நாவே உலகத் துக்குப்
பொதுவான நாவென்று காட்டும் பேறு
தா, தாயே! காரணியின் மூத்தாள் நீயே!
தமிழ்பேசு வோர்பீடு காட்டு வாயே!

சுற்றிடவா வாள்வீசி? உன் வாழ் வுக்காய்ச்
சுடலையிலே வெந்திடவா? சோறில் லாமல்
பற்றுகிற குடலுக்குள் விஷத்தை அள்ளிப்
பருகிடவா? படுகுழிக்கள் இறக்குவோரை
ஏற்றிடவா காலாலே? உன்பொருட்டு
எரிதணலைப் புசித்திடவா? இறக்கை கட்டி
வெற்றுவெளி வானத்தை அளக்க வா? உன்
வேண்டுகோள் எது? ஆணை இடுக தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனே ஒரு வழி உருவாக்க வேணும்!

*தமிழரை இன்னொரு சஞ்சலஞ் சூழுது;*
*தாழ்ந்திடுமோ தமிழ் வாழ்ந்திடு மோவெனுங்*
*கவலையொ டேவருங் காலவி ளைவினைக்*
*கற்பனை யாகவுங் காணற் கிலாததோர்*
*அவல நிலைமை அணுகு(து) இலங்கையில்*
*ஆட்சி மொழிவெறி யானால் மூளுது;*
*அமிழ்தத் தமிழை அழிக்கவுஞ் சிங்கள*
*ஆத்திர வாகிகள் ஆர்த்தறை கூவுறார்!*

*"நாட்டகத் தேபெரும்பான்மை இனத்தினர்*
*நச்சு வெறியில் நடுநிலை மீறுதல்*
*கேட்டினை யே தரும்" என்பது ணர்ந்திடின்,*
*கீழ்த்தர மான கிளர்ச்சி வலுக்குமோ?*
*ஊட்டி வளர்க்கு முணர்ச்சி முதிர்ந்திடின்*
*ஊற்றிடுந் தீமை ஒழித்திட லாகுமோ?*
*காட்டு விலங்குக ளாயழி யச்செயுங்*
*காரியம் - சிங்களக் காடையர் எண்ணுறார்!*

*சிறுமீன் களைப்பெரும் மீன்கள் விழுங்கிடும்*
*செய்கையைப் போலவே, செந்தமிழ் மக்களின்*
*உரிமையை யெல்லாம் ஒழித்திட வேயவர்*
*ஒட்டியொட்டிச்சதி செய்கிறார்! இவ்வெறி*
*பெருகிடு முன்னே, தமிழர் திரண்டொரு*
*பேரணை கட்டுவ தேமுறை; ஆதலின்*
*உரிமையு ணர்வொடு ஒன்றுபட் டேவழி*
*ஒன்றை, உடனுரு வாக்குக் ஊக்கமாய்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க ல் ம கா த் மி ய ம்

கல்லினது பண்புகள் விளக்க ஒரு காவியம்
கற்றவர்கள் முன்னிலையில் வைப்பது கருத்(து)!- எனில்
பல்வரி தெரிந்திட நகைப்பது நகைப்பு! நற்
பாடல் எழுதும் பெரிய பாவலர்களாகிய
வில்லியொடு கம்பன் முதலானவர் தம் நூலிலே
வெய்யவர்களின் கொடிய நெஞ்சை விவரித்திட
நல்ல உவ மானமென நாடியது யாவது?
நாகரிக மாளிகை எழும்புவதொல்?- அது!

காற்றைவயிற் றூடு கிழித் தேவிரையும் "கோச்சி"கள்,
காளையொடு நீளவழி போகிற கரத்தைகள்,
தூற்றுபுழு தித்திரள் தொ குத்தெழ இ ரைந்திடும்
தூரவழி ஏகுகிற வேக "வசு" ஊர்திகள்,
ஊற்றுவியர் வை நனைய ஊரும்நடை யாளர்கள்,
உக்கிர வெயிற்கனலில் உட்படும் எவற்றையும்
ஏற்று நடு வீதியில் இருப்பவைகள் அல்லவா,
இவ்வுலகின் கீழ்மிதிபடும் சிறிய கல்லுகள்!

வாசமலர் தூவி, மணம் மேவுகிற தூபமும்
வாலெரி ப ரப்பிஒளி காலுகிற தீபமும்,
பூசனை பு ரிந்திடு மவர்கள் தர ஏற்றருட்
பொய்கையுள் மு ழுக்கும் இறை வன் உருவம் கல்லடா!
பேசலரி தாகிய பெரும் பொருள்கள் கல்லடா!
பித்தர்சிலர் கையில் உள தான படை கல்லு; நாம்
காசு தர வும் அரிசி யோடுசில கற்களே!
காதினில் மினுங்குவன மாதர்தொறும் கற்களே!

பண்டையக லைச்சிலை பலப்பல; நிமிர்ந்து மேற்
பார்க்கவழி வைத்த தமி ழன் தொழில்கள் கல்லிலே!
விண்தொட எ ழுந்தமணி மாளிகைகள் கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் நிமிர வைத்தடியி லேநெரியும் கல்லுகள்!
கண்டவை என வைக்கும் ஒரு கண்டனம் மொழிந்திடும்
"கல்வி"யறி வாளர்சிலர்க் குள்ள தலை கல்லுகள்!
அண்டமுக டைத்தொடும் மகத்துவம் இவைக்கெனில்,
அண்மையில் ம கத்துவம் மி கப்பெருகி யுள்ளது!

மஞ்சள் நிற அங்கியணி சாக்கியர், நல் லீசனில்
மல்குபெரும் அன்புகொடு வைத்தகுறி பட்ட தால்,
பஞ்சைநிகர் மென்மையொடு பண் புடைய வாகியே
பல்புகழ் நிறைந்தவைகள், கல்லுகள்; அ தன்பினர்
மிஞ்சி எழும் அன்பினர்கள், - சாக்கியரை வென்றவர்,
வீசியெறி கல்லுகள் மகத்துவம் மி குந்தன!
நெஞ்சினை உ ருக்கும், இவர் அன்புமதம்; ஆகையால்
நீதிவழு வா, இவர்கள் ஏவுவன கல்லுகள்! -

அரசியல் பி ழைக்கவிடில் ஆவிவிடு வார்; இதால்
அன்னவர்கள், கூட்டமிசை அன்புகொடு வீசும் அப்
பெருமையுள பண்டமெது? கல்லுகள்! இ தன்னெறி
பேருரைகள் செய்பவரை நேர்வழியில் உய்த்திடும்!
பிரபல சிறப்புகள் மி குந்தவைகள் கல்லெனப்
பேச இவை போதியவை; வீசஉள கல்லினால்
ஒரு நொடி தனிற் பெரிய மாசபைகள் தம்மையும்
ஓட்டிவிட லாமெனில், உரைக்கஉள வோபினும்?

நகரசபை மண்டபம், நதிக்கரை, தெருப்புறம்
நாற்சதுர மான வெளி யாயினும், அணைந்துள
மிகவிரிச னத்திரள்வி ரட்டிவிட வல்லவை
விட்டெறிய வந்து விழு "குட்டு"கள் என்றாலி தன்
மகிமை உரை செய்யவச மாவது கொள்? சொல்லவும்
வார்த்தையிலை! வார்த்தையிலை! நன்கிதைஉ ணர்ந்திடீர்
"பகிடி"விட வில்லை! இனிப் பாடல் முடி கின்றது!
பண்புமிகு கல்லினது பாங்குமுடி யாததே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண மனம் கொள்ளுதடி பித்து!

வானில் ஒளித் தேன்பொழியும் நிலவும்-உன்
வண்ண முகம் காட்டிவிண் உலாவும்
கானகப்புள் பேடையுடன் குலவும்- இன்பக்
காதல்வெறி ஏற்றிஉளம் சுழலும்

ஆழ்கடலின் மேற்கயல்கள் துள்ளும் - உன்
அழகுவிழி என் மனதை அள்ளும்
சூழ்உலகம் முழுதும் துயில் கொள்ளும் - உனைச்
சூழ்ந் தணைத்து மகிழமனம துள்ளும்

செங்கமலத் திதழ்உறையும் சிகப்பு-உன்
செவ்வுடலில் நிறைந்திருக்கும் துடிப்பு
சங்கீதப் பண்ணொளி உன் சிரிப்பு-உளம்
சரணடையும் கன்னங்களின் கதுப்பு,

பூத்திருக்கும் முல்லை மலர்க் கொத்து-உன்
புன்னகையி லேஜொலிக்கும் முத்து
காத்திருந்தேன் இரவுமணி பத்து-வரை
காண மனம் கொள்ளு தடி பித்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம் மானிடர்!

ஓடுகின் றார், வியர்த் துழைக்கின் றார், மனை
தேடுகின் றார், ஒரு தெரிவை யாளினைக்
கூடுகின் றார், இளங் குதலைத் தேன்மொழிக்
கீடுமுண் டோ இகத் தென இயம்புவார்!

ஆக இவ் வளவினுள் அமைந்து, வாழ்வினில்
தாகமும் பசியுமே தனித்துத், தீயிடை
வேகும் இம் மானிடம் வெந்து தம்வழிப்
போகுமுன் நல்லதும் புரிகின்றார்களா?

எடுத்திடும் சூழ்ச்சியில் ஏனையோர்களை
முடிப்பதல்லால், பிற முயன்றுள்ளார்களா?
அடுத்தவர் துடிக்கையில், அருகிற் சென்றுகை
கொடுப்பதில் மகிழ்ச்சியும் கொண்டுள்ளார்களா?

கொழுத்த தம் உடலினைக் கொண்டு வீதியில்
இழுத்திடும் மனிதனுக் கிறுக்கும் கூலியை
முழுக்கவும் தரவும்,அம் முகத்தில் நன்றியை
அழைக்கவு மோ இவர் அவாவி னார்களே?

கருத்து முற் றும் சுய காரி யங்களில்
இருத்திய படிவிரைந் தேகுங் கால், நகர்
மருத்துவச் சாலையின் வழிவி னாவிய
ஒருத்தனுக் கேவிடை உரைத்துள் ளார்களா?

ஆறுகின் றார்களா அன்பு காட்டவும்?
கூறுகின் றார்களா குளிர்ந்த சொற்கள்? முன்
னேறுகின் றார்களாம், ஆண்டு நூறின் முன்
ஈறுகண் டேவிழுந் திறக்கின் றார்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தே ன் மொ ழி"
** நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுச் சின்னம் **
நிர்வாக ஆசிரியர்: தி. ச. வரதராசன். இணை ஆசிரியர் : 'மஹாகவி'
அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். இலங்கை
ஆண்டுக் கட்டணம்: ரூ. 3-00. தனிப்பிரதி 25 சதம்.
அச்சு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்,

# புற இதழ்

* "தேன் மொழி"க்குக் கிடைத்துவரும் வரவேற்பும் வாழ்த்தும், எமக்கு மிகுந்த ஊக்கந் தருகின்றன. இதோ ஒரு பாடல் :

" தான் மொழிந்த செய்ய தமிழ்ப் பாடல் பன்னூற்றை
வான் மொழிந்த பேரமுத மாய்வழங்கும்-"தேன்மொழி"க்குச்
செப்பும் நினைவு தரு சின்னமொன்று தோற்றுவித்தான்
ஒப்பில் வரதனொப் பான்."

- பண்டிதர் சோ. இளமுருகனார்.

* நவாலியூர்ச் சோமசுந்தரப் பெரும் புலவர் தமிழுலகுக்கு விட் டுச் சென்ற செல்வங்கள் இரண்டு. ஒன்று தமது கவிதைகள்; மற்றது தமது அருமைப் புதல்வர்கள்! தந்தையின் நடமாடும் நினைவுச் சின்னமாக விளங்கும் புலவரின் புத்திரர்களிலே ஒருவர் தான் **புலவர் நடராசன்**. இந்த "நவாலியூர் நடராச"னின் கவிதை ஒன்றை இந்த இதழில் வெளியிடுவதில் "தேன் மொழி" மகிழ்வெய்துகிறாள். காளிதாசனின் மேக தூதத்தையும், ரவீந்திரரின் கீதாஞ்சலியையும் அருமையான தமிழ்க் காவியங்களாக்கித் தந்த இக் கவிஞர், சிறு கவிதைகளும் பல எழுதியுள்ளார் என்பதை அறிவீர்கள். அவருடைய புதுப் படைப்புக்களை இனித் தேன் மொழி பரிமாறுவாள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்,

* சென்ற இதழில் கொடுத்திருந்த "வேசிக்கும் உண்டோ விருப்பு" என்ற அடிக்கு அனேக பாக்கள் வந்து சேர்ந்தன. அவற்றுள் சிறந்தவையை இந்த இதழில் காணலாம். நேயர்கள் காட்டிய பேரார்வம் இந்த "அடிகொடுத்த"லைத் தொடர்ந்து நடத்தத் தூண்டியுள்ளது. இம்முறையும் ஒரு வெண்பாவின் ஈற்றடி தருகிறோம், முழுக் கவியையும் எழுதி அனுப்புங்கள். இது தான் அடி **"வீட்டிலே வைத்த விளக்கு"**

- **ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்மொழி

திங்கள் வெளியீடு

யாழ்ப்பாணம். மார்கழி,1955


## கதிரவன் உதயம்

கூரிரு ளகன்றது கூவின கோழி:
குருவிக ளெழுந்தன மறைந்தன விண்மீன்
ஏரியிற் றாமரை யினமலர் மலரும்
இறையவன் கோயிலில்மணியொலி கேட்கும்
ஊரினிற் றொழில்புரி மாந்தர்க ளெழுந்தார்
உயர்மரக் கொம்புவிட் டோடின காக்கை
சேர்கிழக் கெனுந்திசை வெளுத்தது மெல்லச்
செங்கதி ரவனுத யஞ்செய்கி றானே

இன்னிசை வீணைகள் மீட்டுகின்றார்கள்
ஏற்புடைக் கீதங்கள் ஓதுகின் றார்கள்
மன்னிய மலர்வகை சிரிப்பன போல
வாய்மலர் கின்றன வண்டுகளூதும்
அன்னங்கள் தாமரை மலர்மிசைத் தாவும்
அழகிய குயிலினம் மகிழ்வுறக் கூவும்
செந்நிறக் கதிரெனுங் கரங்களைக் காட்டிச்
செங்கதி ரவனுத யஞ்செய்கி றானே

- நவாலியூர்ச்
சோமசுந்தரப்புலவர்

4

ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.து. சுப்பிரமணிய யோகி

# அ ன் றொ ரு நா ள்

அன்றொருநாள் :

அம்பிகைபாதத் தணிவதற்காக
மலர்சிலநாடி வனமெலாம்சுற்றிப்
பலகால் அலைந்தேன், பகலும் கழிந்தது.
முள்ளும்களறும் முறுக்குக்கிளைகளும்
செத்தையும் குப்பையும் சிறுசிறுகுச்சியும்
அலலால்வேறே யாதுமேகாணோம்!

என்னுடை இதய கசியக்கனிவைத்
தேவிக்கனுப்புவான் தேடினேன் தூது;
மாருதம் வந்தது, வாசனையில்லை;
குயில் கூவிற்றுக் , கூச்சலேமிகுதி!
கிளியோ சொன்னதைச் சொன்னதைக் கிளத்தும்!
புள்ளினம்யாவும் பொருளிலாக்கத்தின்;
தல யாது நான் செய்வேன், யாரிடம் சொல்வேன்!

அந்திமீன்வந்தது; அதனிடம்கதையை
உரைக்கும்போதே பளிச்செனு ஒளிச்சது;
கங்குல்தோன்றினாள்; கையில்மதிய
விளக்கிலை; மீனின அணிகள்மினுக்கலை;
மழைக்கணீர்த்துளிகள் மயங்கும், சொட்டும்,
எங்கோதுன்பத் தெரிவாள் வெட்டும்
யாது நான் செய்வேன், யாரிடம் சொல்வேன்!

பாயும் துயரில் படுக்கையில் சாய்ந்தேன்.
உள்ளக்கண்ணீர் வெள்ளம்கண்வழிப்
பாய்ந்தென் ஆடையும் படுக்கையும் நனைக்கும்
அப்போதுகதவை யாரோதட்டினார்.
யார்? என் காதலி அம்பிகையமுதம்!

அவள் கூறினாள் :

அன்ப, உன்னிதயத்து யான் குடியிருக்க
ஏனோவெளியிலே என்னைத்தேடினாய்?
உன்னுளேஎன்னையே உணர்வாய் நான் நீ
என் றாள், அறிந்தேன், இணைந்தேன், இறந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் தத்துவம்

*சிற்றாறு பேராற்றிற் கலக்க வந்தச்*
*சீறுமொலிப் பேராறு கடலிற் சென்று*
*வற்றாத அதன் நீலப் பரப்பி னுள்ளே*
*வடிவழியும். உலகினிலே தனிமையாக*
*நிற்காது பொருளொன்றும். மேலேயுள்ள*
*நீள்விசும்பில் அலைகாற்றில் கந்தம்சேரும்.*
*சுற்றாடல் முற்றாயிச் சேதிதானே;*
*சுந்தரி, நீ மட்டுமென்ன விலக்கோ? அன்றே.*

*வானகத்தை வளர்மலை தான் தழுவிநிற்கும்.*
*வாருதியில் அலைகளெலாம் தழுவிநிற்கும்.*
*தேனகப்பூ மெல்லி தழைச் சுவைத்துநிற்கும்*
*சிறைவண்டு. பூமிதனை முத்தமிட்டு*
*வானரசன் கதிர் நீண்டு மகிழும இந்த*
*வளர்முத்த வகையெல்லாம் கண்டுமென்ன,*
*கானகத்து மடமானே, நீயுமென்னைக்*
*கரங்கொண்டு அன்புடனே தழுவாவிட்டால்?*

**– அ. ந. கந்தசாமி.**

(ஆங்கிலக்கவிஞன் ஷெல்லியின் கருத்து.)

*"அறிவு தறித லறிவுமற் றறியாமை*
*அறியாத தறிவோ மெனல்."*

**– சோ. நடராசன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ ர ர ம க ளி ர்

ஈரநிலா தாரகைகள் இடையே நின்றும்
இலங்கிற்று; வாள் வீச்சே போல நீரில்
சூரைசுறா கயல்பாய்ந்து துள்ளி யாடிச்
சுழிக்கின்ற அப்பரவைக் கடலின் மீது
நீரரவ மகளீரின் பண்ணைக் கேட்டு
நெஞ்சாரக் களிகொள்ள ஓட மொன்றின்
பாரமதாய் நான் மட்டும் இருந்தேன்; தென்றல்
பாடிற்று தென்னாட்டின் முல்லைப் பண்ணை!

அர்த்த இரா கிட்டிற்று; அகில மெங்கும்
அடங்கிற்று; மோனத்தில் ஆழி நீரைப்
பொத்துக்கொண் டோரழகி எழுந்தாள்! ஆக்கை
பொன்னிலவிற் பூந்தாதை அப்பிச் செய்த
சித்திரம்போற் தோன்றிற்று! அவளைச் சுற்றிச்
சேடிகளும் நின்று குரல் முதலா யார்க்கும்
துத்தங்கைக் கிளைஉழையும் இளியி னோடு
தூக்குவிள ரியும் தாரந் தொனிக்க மீட்டும்!

மகரயாழ் ஒருகையில், சீறி யாழோ
மங்கைவலக் கைதாங்கப் பாங்கி மார்கள்
தகதகெனும் வலம்புரிச் சங்க மேந்தித்
"தாம் தகத தோம்தத்த தானா" என்று
அகமுவக்கும் அனுராகத் தமிழ்மு ழங்க
அந்தரத்தில் தண்ணெழிலி அமளி மேலே
சுகமாக வீற்றிருந்து விபுலா னந்த
சுவாமிகளே சுரம்பாட லயித்த தாவி!

அருபமணித் தேரோட்டி அடிவா னத்துக்
கப்பாலும் அப்பாலும் ஊர்ந்த காலை
பெருமுழவு கொட்டும் ஒரு கூட்டம், ஓசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகுழல் வாசிக்கும் பெண்கள், தங்கத்
திருவடிகள் நடமாடச் சிலம்பு பாடத்
தீந்தமிழின் நாதப்ர வாகம் பொங்கிப்
பெருகியதைப் பருகியவென் ஆவி அங்கே
பெற்றசுவை மற்றொருகாற் பெறவு மாமோ!

கார்வண்ண முனிதந்த யாழ் நூல் என்றன்
கைமேலே விரிபட்டுக் கிடக்கக் கண்டேன்!
ஆர்தந்தான் அதுபோலச் சமதை நூலை
ஆய்ந்தாய்ந்து தமிழோசை அனுப விக்க!
சீரென்ன, பொருளென்ன, செறிந்தி னிக்கும்
செந்தமிழின் நயமென்ன! எல்லா மென்றன்
நேர்நின்று பேரின்பக் காட்சி நல்கும்
நெடும்கனவு நிலையென்ன! கொள்ளை இன்பம்!

துய்த்துவிட்டேன் பேரின்பம்! துயிலை நீத்துத்
துடுப்பெடுத்தேன் ஓடத்தை நடத்த! வாவி
எத்திசையை நோக்கிடினும் சாந்தி கண்டேன்!
இன்பத்தின் எல்லையைவிட் டிறங்கல் போல
முத்துகளைப் பீச்சிவிட்ட சிப்பிப் பாறை
முட்டியது; கரையென்று தெளிந்து யானும்
பத்திரமாய் மட்டுநகர் மண்ணில் வந்து
பளிங்குநிலா வழிகாட்ட விடுதி சேர்ந்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பவர்க் கழைப்பு

ஒருசாண் வயிற்றை ஓம்பிட உழைத்துச்
சருகா யுலர்ந்த சாதியே! உன் குரல்
நரிவாய் ஊளையாய், நாய்களின் குரலாய்,
புரிவார் நோக்கிற் புல்லாய்ப் புழுவாய்த்
தெரிவோய்!! உம்மாற் தேடிய தேட்டம்
அரசாள் கோட்டைக் (கு) அடித்தள மென்பதை
சிந்தித் தாயா? செத்துப் பிழைத்து
அந்தர வாழ்வின் அலைக்கல மாகி...
வந்தவர்க் கெல்லாம் வரையுற உழைத்துத்
தந்தனா பாடுந் தாழ்வினைப் போக்க

சுரண்டுங் கைகளைச் சுக்குநூறாக்கத்
திரண்டு வா; இத் தேசமுன் உடமை!
உருண்டிடு முலகெலா மோம்பிடுங் கைகள்
மிரண்டு வாய்பொத்தும் மேதினி உளதேல்
கொத்திப் புரட்டு....... கொட்டும் வியர்வை
முத்துப் பசளையை மொய்ப்புறக் கிளறிச்
சத்துப் பொதிந்த "சமத்துவ" மென்னும்
புத்தம் புதிய வித்தைப் புதைத்து
விளைவினைக் கண்டு வெற்றிகொண் டாடு........
அழகொளி ருலக மதுவெனப் பாடு......!

உழைக்குங் கைகளி லுலகாள் செங்கோல்
நிலைக்கும் நாளே நேரிலாத் திருநாள்
திளைக்குஞ் செளிப்பிற் தேசஞ் சிரிக்கும்!
ஒழிக்குங் கரவு ஓடும் நல் குரவு...
அழைக்குதோ ராவி அமர உருவிலே;
வழிவழி வந்த வறுமையற் றொழிய
எழு; நட்........விரைவாய் "இலட்சிய பூமி"
"உழுபவ ருடமை ஓடிவா........ ஒன்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நி ழ ல ரு மை

ரசிகர்:
கீரனா, அன்றி இளங் கோவா, கிறுங்காத
பாரதியா, எந்தப் பரம்பரை நீர் பாடுதற்கு?
கரும்பாய்க் கவிதந்த காப்பியனார் தம்தொழிலைத்
துரும்பு மனிதர் நீர் செய்யத் துணிந்ததென்னே ?

கவிஞர்:
உப்பற்ற செய்யுள், உரைநடையை ஒத்தது வீண்
குப்பைக் கடதாசிக் கூழங்கள் என் கவிதை
ஒப்புக்கொள் கின்றேன்! எனினும் உயர்ரசிக!
தப்பில்லை யாயின் சரியை உணர்வார் யார் ?
வெய்யில் இலையேல் நிழலை விரும்புவிரோ?
பொய்யிலையேல் மெய்யின் புனிதம் வெளிப்படுமோ?
நஞ்சிலையேல் நல்லமுதை நாடுவக்கக் கூடுமோ?
கொஞ்சம் செவியைக் கொடுங்கள் என் பாட்டுக்கும்!
கம்பன் விருத்தக் கவியின் சுவைகாண
என்றன் கவியில் இரண்டை எடுத் தோதுங்கள்!

ரசிகர்:
அப்படியா! நன்றி! அறிந்து மகிழ்கின்றேன்!
எப்பொழுதும் ஓயா தினிஎழுத வேண்டுகிறேன்!
தெள்ளத் தெளிந்த தமிழ்த் தேன்மொழியின் சீர்தெரிய
நொள்ளைக் கவிதைபல நூறு தருவீரே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டிலே வைத்த விளக்கு

வானில் பரிதி, கமலமலர் வாவியிலே,
ஊனில் விழிகள் உளவிளக்காய்! -"தேன்மொழி"யே!
ஏட்டிலே வைத்த விளக்கெழுத்தாம்! இல்லாளே
வீட்டிலே வைத்த விளக்கு!

– சோ. சண்முகபாரதி.

அம்பளவு கண், அழகுச் செம்பவள வாய், வஞ்சிக்
கொம்பளவு மின்னலிடை! கொங்கைகளோ- செம்பளவு!
காட்டி மருட்டிக் கணையாழி கொண்டவளே
வீட்டிலே வைத்த விளக்கு!

– வி.கி. இராசதுரை.

"கலகல"" வென்ற சிரிப்பாற் கவலை
இலையாக்கும் இன்பக் குழந்தை! - தலை இழந்த
நாட்டின் இருள் கடிதல் நாளை! அவன் இன்றைக்கென்
வீட்டிலே வைத்த விளக்கு!

– செல்வி. முத்தையா.

வறுமையே சூழும் இவ் வையத் திருளின்
வெறுமையில் கண்ட விருந்து சிறுபாலன்!
ஆட்ட நடை நடந்தே "அப்பா" என் றோடிவர
வீட்டிலே வைத்த விளக்கு!

–ச. அசோகன்.

முப்பாலை ஊட்டினான், மூத்தகுடிப் பண்பாடு
தப்பாம லேவாழ்ந்து காட்டினான் - இப்பாருக்
கீட்டினான் வாழ்விவனின் இன்பத் திருக்குறளே
வீட்டிலே வைத்த விளக்கு!

– பரிமளா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லறிவைப் போக்கிப் பொருள் நிலைமை தான்காட்டி
நல்லறிவாம் உள்ளொளியை நல்கு தலால்- தொல்சிறப்பின்
ஏட்டிலே நின்ற திருக்குறளே என் உளமாம்
வீட்டிலே வைத்த விளக்கு!

–"செவ்வேள்"

புகை இலையே, வெப்பிலையே, புல்லவரும் ஈக்கும்
பகை இலையே எண்ணிற், பணியாத்- தகையுடனே
நாட்டிலே வாழ்என்னும் நற்றமிழ்ப்பண் பாடே என்
வீட்டிலே வைத்த விளக்கு!

–"தமிழ் மகன்"

தண்ணளியுந் தாங்கிடாள் தன்பெருமை யிற்றாழ்வாள்
கண்ணாகுங் கற்பினிலே காசுற்றாள் - பெண்பேய் தான்
பூட்டிலே சூழ்ந்துறையும் புகைநடுவி லேயணையும்
வீட்டிலே வைத்த விளக்கு!

–குறமகள்.

அன்பே திரியாய், அருளே நறுநெய்யாய்,
இன்பே சுடராய் இருளோட்டும் - மின் சாயல்
காட்டியே எற்குக் களியூட்டும் காதலியே
வீட்டிலே வைத்த விளக்கு!

– செ. வேலாயுதபிள்ளை.

நெய்யோ திரியோ நெருப்போ எதுமின்றிப்
பொய்யா திருளைப் புறம்போக்கும்!- ஐய! "அவள்"
பூட்டிலே வைக்காத புன்னகையின் முத்தேவன்
வீட்டிலே வைத்த விளக்கு!

– காப்பியாற்றுங் காப்பியனார்.

பொன்னைப் பெறலாம் புகழ்பெறலாம் பூவுலகில்
என்னத்தைத் தானும் நாம் எய்திடலாம் - அன்னை உனை
நாட்டிலே நான் வேறு காண்பேனா அன்னாய் நீ
வீட்டிலே வைத்த விளக்கு!

– "மிருசுவில், அரி அரன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சகரையா!

வாருங்கோ ! நம் விமர்சகரையா!!
வணக்கம்! வந்திக் கதிரையிலே உட் -
காருங்கோ ; என்ன காரியம்? சும்மா
கண்டு போக நினைத்திருப்பீரா?
நேரங் கோடிபொன் ஒத்தது சாமீ ;
நீதியன்றதை வீணிலடித்தல்!
காரமானதும் பேனையினின்றும்
கரைபுரள்க, எழுத்தின தீட்டம்!

பேப்பர்க்காரன் உயிருடன் உள்ளான்,
பெருமைகொண்ட எழுத்தினை அச்சிற்
கோப்புச் செய்து வெளியிட; இன்னும்
குறைநமக்குள தோ? சில பேருக்(கு)
ஆப்பு வல்லிட்டுக் குத்திகள் கொண்டே
ஆசைதீர அடிதரலாம் நீர்!
ஏப்பம் விட்டது போதும்; இன்றைக்கு
என்னதான் "படைத்தீர்"? அதைச் சொல்லும்

குற்றவேட்டையே லட்சிய வாழ்க்கை;
கோடி கோடி புகழ்பெறவேண்டின்,
இற்றைநாளின் இலக்கியமெல்லாம்
ஈனமென்று நிமிர்ந்துரை கூறும்;
கற்றயாவையும் குப்பைகளென்றே
கதையளந்திடும்; காரணம் வேண்டாம்!
"வெற்றிவீரர்" என் றேபுவி உம்மை
வியந்திடாவிடில் நீர்எனைக் கேளும்!

அறிவொர் இம்மியும் வேண்டியதில்லை.
ஆக, வேண்டிய தென்னவா? கேளும்;
குறைகளாயிரங் கூறுதலோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்கள் தம்மை விழுங்கிட வேண்டும்!
மறையின் வாசகம் என்றிதைக் கொண்டே
வாழ்விராயிடின் நிச்சயம் வெற்றி!
நெறியில் இவ்விதம் நின்றினி என்றும்
நீடுகாலம் கலைவளர்ப் பீரே!

வெற்றி எங்கள் தரப்பினில்; எங்கள்
விமர்சனத்தைப் பழிப்பவர் மூளை
குத்திகள் - பனங் கொட்டுகள், ஐயா!
குன்றின் உச்சியில் உள்ளகல்லுக்கள்!
தொற்றுவீர் புகழ் ஏணியின்நெஞ்பில்;
தூக்கி மேல்விட நாங்களும் உள்ளோம்.
சற்று மேதயங் கல்மதி கேடு!
சாகுமட்டும் வசைமொழி பாடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் குழந்தாய், பாடு!

தமிழ்மொழியும் தாய்நாடே உன்னைக்காக்கத்
தலை அரிந்து தருவேன்! என் தாலிபூண்ட
அமிழ் தனைய துணையாளைப் பிரிவேன்!..... என்று
அலைபுரளும் அகங்குமுற, அன்னைக்காகப்
புகழ்பதவி பொருள் போகப் பற்றுவிட்ட
புதல்வா! என் பொக்கிஷமே! புவியில் மன்ன!
தவழ்குழந்தைப் பருவத்தில் தந்ததாய்ப்பால்
தமிழ்ப்பால்- உன் இதயமதில் துடிக்கக்கண்டேன்!

சங்கிலியன் சாவின்றி வாழுந்நாட்டில்
சமர்வீரன் எல்லாளன் சாகாநாட்டில்
சிங்களச்சிங் காரியவள் சிறப்பாய் ஆளச்
சிறையினிலே தமிழணங்கைச் சிதைப்போமென்று
பொங்குகிறார்! பொருமுகிறார்! பொறுமையின்றிப்
போர்க்கெழுந்து கொக்கரிக்கும் பொருண்மையற்றோர்,
பங்கமிலாப் பண்புமிளிர் பழமையெல்லாம்
பார்த்தழியப் பாதைபல படைத்துப்பாடு!

பிள்ளை மனத் தோடிருந்து பிறந்தநாட்டைப்
பிளவுசெய்யும் பிரளயத்தைத் தவிர்க்க எண்ணி
எள்ளிநகை யாடு நிலை எய்திவிட்டாய்!
என்ன செய்வோம்? என்குழந்தாய்! எழுந்து உந்தி
உள்ளமதில் ஊற்றெடுக்கும் உணர்ச்சிவெள்ளம்
உலகழிக்கும் உதிரவெள்ளம் ஆகுமுன்பே
தெள்ளு தமிழ்த் தேன் மொழியை ஆளவைப்போம்!
தேடுவழி! சேர் தமிழன் குலத்தைஒன்றாய்!

தூங்குகிற தமிழ் இதயம் துடிக்கப்பாடு!
துன்பனலிற் சாம்புமனம் துளிர்க்கப்பாடு!
ஏங்குகிற எமதுகுலம் எழும்பப்பாடு;
ஏவல்கள் செய் எளியவர்கள் ஒழியப்பாடு!
வேங்கைவரிப் புலி கரடி போன்றுவேறாய்
வெகுண்டோடுந் தமிழ்த் தலைவர் சேரப்பாடு!
ஓங்கிவளர் தமிழுணர்வு ஒழுகிப்பாய
ஒருகுரலில் தமிழுரிமை கோரிப்பாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணை இதோ மகனே!

சோதரர்க்குள் சண்டைபகை மூட்டிவிட்டுச்
சுகங்காண நான் என்றும் நினைத்ததில்லை
ஆதரவு தருவார்கள் எனக்(கு); என்சேயை
அணைப்பார்கள் அறவழியில் நடப்பாரென்று
வேதனையும் கண்ணீரும் வெறுப்பும்கண்ணில்
வேல்பாய்ச்சும் கொடுசெயலும் பொறுத்தேனன்று
பேதமற வாழவழி செய்க என்றேன்
பிழைசெய்தேன் அதைமறந்து போர்தொடுப்பாய்.

**- "நல்லைச் செங்கதிர்"**

உன்மழலை அழுகின்றான் தொட்டிலுள்ளே
உனைக்கண்ட வுடன் தனது மலர்க்கை பொத்தி
பொன்னனைய கால்களினைப் போட்டடித்து
"போர்செய்ய வா அப்பா தமிழுக்காக"
என்றுசொலும் பாவனை தான் அதுவேறல்ல
எழுந்திடுவாய் எதிர்த்தவரைத் துகள் நூறாக்க
சிந்திக்க இதுநேர மல்ல ரத்தம்
சிந்திடினும் தயங்காதே தமிழைக்காக்க!

**- செ. வரதராசன்.**

---

## ஏது செய்வார்?

கையில் விலங்கினைப் பூட்டிடலாம்;
கசையடி தந்துயிர் வாட்டிடலாம்;
மெய்யினை வெஞ்சிறைப் போட்டிடலாம்-கொள்கை
வேகத்தை மாய்த்திட ஏதுசெய்வார்?

ஊசிகள் கொண்டு துளைத்திடலாம்;
உதிரம் பெருக்கி வதைத்திடலாம்;
ஏசி அடித்து மிதித்திடலாம்- உள்ளம்
ஏற்றதை மாய்த்திட ஏது செய்வார்?

**- சின்னப்பா பாரதி, சென்னை,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கரும்பு

*(டெலிபோன் மணிச்சத்தம் கேட்கிறது. அழகி டெலிபோனை எடுத்துப் பேசுகிறாள்.)*

**அழகி (தலைவி) :** *யாரதுவோ? தந்தைஎங் கேயோசென்றார்;*
*இன்னும் சற்றுப்போதில் வருவார்....... உங்கள்*
*பேரெதுவோ சொல்லுங்கள், சொல்கின்றேன்......*

**கண்ணன் (தலைவன்) :-** *(குரலை மாற்றிப் பேசுகிறான்)*
*..... என் பிறை நுதலே! பேரெழிலோய்! பே(சு); உன் பேச்சுச்*
*சீர் தளைகள் செப்பமாய் அமைந்தசெய்யுள்ச்*
*சிறப்புடைத்து; கேட்டுக்கொண் டிருக்கின்றேன்!.....*

**அழகி :-** *(கோபித்துப் பாய்கிறாள்)................... ஓய்*
*ஊரெதுமக்(கு)? உழறா தீர்; உந்தவாய்க்குள்*
*உப்பள்ளிக் கொட்டேனோ, சீ, போய்வாரும்!*

**கண் :-** *(சொந்தக்குரலில்)*
*ஆஅழகீ, என்மேலா கோபம்? பேச்சை*
*அறுத்துவிட்டுச் செல்லாதே! அடியேன் கன்ணண்*
*நீவிழையா நேரத்தில் நின்னைக்கூவி*
*நிம்மதியைக் குழப்பிவிட்டேன். மன்னி!....*

**அழகி:-** *(ஆளைத் தெரிந்து கொண்டு).................. கண்ணா ,*
*வோ,விளையா டாதே! அப் பாவைஏய்க்கப்*
*புதுக்குரல்கொண் டென்னையே ஏய்த் தாய்!.........*

**கண்:** *................ ..... ...... அன்பே !*
*தீவிளையும் என் நெஞ்சில் உன்வாய் இன்பத்*
*தினை விளைக்கா தோ? சொல்லால் தீண்டாயோடி?...*

**அழகி :-** *இன்றைக்குச் சொல்லிவிட்டேன் அன்னை காதில்!*
*இரந்தேன் சற் றிரங்கினாள் எனினும், "போடி*
*ஒன் றுக்கும் உன் தந்தை ஒப்பமாட்டார்!*
*உனக்கென்ன தெரியாதா?" என்றாள்; இங்கே*
*என்றைக்கும் இப்படியா கிடந்துமாள்வேன்?*
*எப்போது வீழ்வேனோ உங்கள் கைக்குள்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்காய்க் காத்துக்காத் தகலாநாளை
அளந்தளந்து போக்கிக்கொண்டிருக்கின்றேன் நான்!

கண்:- கல்லிடையும் நெல்விதைத்துக் கழனியாக்கிக்
காலமுற்றும் துலாமீதில் துலையில்வேர்த்துப்
பல்லரிசிச் சோறாக்கிப் பொங்கல் நாளில்
படைக்கின்ற யாழ்ப்பாணத் துழவன் பிள்ளை,
முல்லைவரி சைச்சிரிப்பில் மூழ்கி ...........

அழகி :- ....... ...................... மூழ்கி,
முத்தெடுக்க மூச்சின்றி முளிக் கின்றானா?

கண் :- நில், அரசி! நிலவெனினும் கொணரவல்ல
நெடுமுயற்சிக் காரரடி நாங்கள்!...

அழகி :- ............................... போங்கள்!
காற்றடிக்கும் போதினிலே கதவடைத்துக்
கட்டிலிலே வீழ்கின்றேன்- தென்றல் கொல்லும்
கூற்றொடொத்த தே!..................

கண்:- ........உண்மை அழகி! கொம்பில்
குயில் இடைக்கி டையிருந்து கூவும்போது
தோற்றெடுக்கின்றேன் ஓட்டம்! அடுத்தடுத்துத்
துயர் எடுத்து முன்வைக்கும் இந்தமண்ணில்
நாற்றெடுத்து நட்டதுவும் கதிராதொங்கும்?
நாள் இருக்கு..................

அழகி:-......... நாளிருக்கென் றிருங்கள் நீங்கள் !
சீதனத்தில் கண்கொண்டே என்னைச்சுற்றித்
திரிகின்றான் திட்டம்போடுகிறான், அந்த
நாதனுக்கே என் வாழ்வைத் தருவதற்கு
நடக்கிறது பேச்சுக்கள் இங்கே, நாளைப்
போதெனக்கு வய தாகிப் போகுமன்றோ?
போய் எழுத்தை முடித்துக்கொள் வோம்! இப்புன்மைச்
சூதினுக்கோர் எல்லையற்ற உலகில் நாங்கள்
சுகித்திருக்க வழிபிறரா கோலுவார்கள்?

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தே ன் மொ ழி"**

**** நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுச் சின்னம் ****

**நிர்வாக ஆசிரியர்:** *தி. ச. வரதராசன்.* **இணை ஆசிரியர் :** *'மஹாகவி'*

**அலுவலகம்:** *226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். இலங்கை*

**ஆண்டுக் கட்டணம்:** *ரூ. 3-00. தனிப்பிரதி 25 சதம்.*

**அச்சு:** *ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்,*

# புற இதழ்

* தமிழ் நாட்டின் தலை சிறந்த கவிஞர்களில் ஒருவராகிய **சு.து. சுப்பிரமணிய யோகி** அவர்களை ஈழம் நன்கறியும். கம்பனின் கம்பீரகதியிற் செல்லும் கவிதைகளைக் கொண்ட "தமிழ்க் குமரி" என்னும் அவருடைய கவிதைத் தொகுதியை நேயர்கள் படித்துப் படித்துச் சுவைத்திருப்பார்கள். எளிமைக்காக அழகையும் காம்பீர்யத்தையும் இழக்காத இனிய பாக்களைத் தரும் அவருடைய "அகலிகை"யையும் "கண்ணகி"யையும் மறக்கவே முடியாது. தேன்மொழி இதழ்களைக் கண்டதும் வாயாரப் பாராட்டியதோடு அவளுக்கு இரு கவிதைகளும் தந்தார். அவற்றில் ஒன்றை மகிழ்வுடன் இவ்விதழில் வெளியிடுகிறோம்.

* தேன்மொழிக்கு ஏராளமான கவிதைகள் வந்து சேர்கின்றன. அவைகளில் பல பிழைகள் மலிந்தும், கருத்துத் தெளி வற்றும் இருக்கின்றன. நேயர்கள் சிறிது அதிக கவனமெடுத்து எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். "ஆரம்பக் கவிஞர்கள்"பதினாறு வரிகளுக்கு அதிகமாகாத சிறு கவிதைகள் எழுதினால், பார்த்து வெளியிட முடியும்.

* அடுத்த இதழ் வெண்பா ஈற்றடி இது:

**இல்லையோ கண்கள் இரண்டு!**

**- ஆசிரியர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்மொழி

திங்கள் வெளியீடு

யாழ்ப்பாணம். தை-மாசி,1956


## பொழுது விடிந்தது!

ஆர்கலி வளை இய பாரகம் போர்த்த
கூரிருள் கழிந்தது; கோழிகள் கூவின;
கடவுளர் நிலைதொறும் படுமணி இரட்டின;
பூங்குயில் கூவின; புட்குல மார்த்தன;
வானக வாவி மீனலர் கூம்பின;
மண்ணக வாவி கண்ணலர் விழித்தன;
கண்படை கழன்று மன்பதை யெழுந்தது.
குடகடற் குளித்துக் குணகட லுதித்த
காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
நீல வானிடை ஒருபனை நிமிர்ந்தனன்.

- நவாலியூர்ச்
சோமசுந்தரப்புலவர்

5

ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ ன் ?

கனியும் காயும் பிஞ்சுகளும்
காணும் காணும் கிளைகளெலாம்
குனியும் படி தாங் கொண்டபல
கொய்யா மரங்கள் கூடியதோர்
இனிய வனத்தில் தனித்துணவுக்
கேங்கும் பசிமே லோங்கியதே
யெனினும், என் அச் சிறு மந்தி
எட்டிப் பறிக்கக் கிட்டிவரும்
கனியைச் சுவைக்க மனமின்றிக்
காட்டில் அலைந்து திரிகிறதே?

பரத்திக் கிடக்கும் பசுந்துகிலின்
பான்மை விளக்கும் பழனத்துப்
புறத்தங் கெவனோ புன லூட்டிப்
புதிதாய் வளர்த்த பைங்கூழில்
துரத்தும் வயிற்றுக் கொடும் பசியின்
துடிப்பில் புகுந்த காட்டெருமை
விரத்தி யுடனே யக்கரையில்
வெம்பிக் கிடக்கும் புல்லினிடம்
சிரத்தை இழுக்க ஏன் வீணே
சென்றாங் கோடி அலைகிறதே?

குலையா அழகும், குணநலமும்
கூடிக் கலந்த பெண்ணுருவில்
சிலையாய்க் கிடந்த தெய்வ தமே
சேரத் துணிந்து வந்ததுபோல்,
நிலையாய் இருக்க, மனையவள் கண்
நீராறாக விட்டு விட்டு
விலைமா திருக்கும் வீதிகளில்
"வெட்டிக் கேனிப் பட்டிமகன்
தொலையத் தன்கைப் பொருள் முழுதும்
தோற்றும் சுற்றிச் சுழலுகிறான்.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுத் திரையில்...

முகை அரும்பி மலர்ந்து கீழே விழுகிறது; நாம் அறிகின்றோமா?
காய் கனிந்து கீழே உதிர்கின்றது; பார்க்கின்றோமா?
இளமை முற்றி, கனிந்து முதுமையாக வாடுகிறது;
(கவனிக்கின்றோமா?
கிணற்று நீர் மீண்டும் மழையாக மாறிவிடுகின்றது!

குயிலோசை சென்று சோலையெங்கும் பரந்து விடுகின்றது;
கடல் அலைகள் மீண்டும் மீண்டும் பிறந்து கரையில்
(செவிசாய்க்கின்றன;
கவியின் மட்டற்ற எண்ணங்கள் நுரைபோல் கொந்தளிக்கின்றன;
புன்னகை வியாபகமாகித் துயர் உண்டாக்குகின்றது;
(ஏனோ இப்படி வாழ்வு?

சுடுகாடு வாழ்ந்த வாழ்க்கையை நினைப்பூட்டுமாகில்
வறுமை உணவின் கொடுமையை ஆராய்ந்து பார்க்குமாயின்
வெறுமையான இன்பங்கள் மட்டற்ற வாழ்க்கையை
(நினைப்பூட்டுமாயின்
இயற்கையின் மடியிலே குழந்தை நித்திரையும், மடிதலும்
(செய்கின்றது என்போம்.

சூரியன் வந்த வேலையைச் செய்யட்டும், கூட்டுபவளைப்போல;
பணக்காரன் ஏழையை வதைக்கட்டும், அரிவாளைப் போல;
உடம்பெடுத்தவன் உயிரோடு போராடட்டும்,
நண்பர்களைப்போல;
எல்லோரும் சென்ற வழியிலே நடப்போமா, எப்படி வந்தாலும்
(நடக்கட்டு மென்று?

விளக்கிலே எண்ணெய் வற்றி விடுகின்றது-காணவில்லை
காதலிலே இன்பம் மறைந்து விடுகிறது- தெரியவில்லை
பேச்சினிலே பொழுது போய்விடுகிறது-தோன்றவில்லை
இறைவனிலே பக்தி தேய்ந்து விடுகிறது- பார்க்க முடியவில்லை
எல்லாம் தேய்விலே ஒளிபெறுகிறது; இயற்கைக்கு ஆறு தல்
(இது ஒன்று தானோ?

- "சோதி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூ த ன க் க வி தை

"வேயெனும் தோள்; விரை மலரெனும் தாள்ட் விடா
நோயினும் கொடிய கண்; நுதல் பிறை; நூலிடை;
தாயினும் இனிய சொல் தமிழெனத் தகும்" எனத்
தேயின் எம் கவி, கரை தென்படக் கூடுமா?

பூசியும் புதிய பூ புரிகுழற் சூடியும்,
"நேசி" யென் றயல்வரும் தாசியே என மயக்
கோசைபெற்றுருவமுற் றுண்மையற் றுடலுறும்
ஆசைபற் றிய வையால் ஆர்கடைத் தேறுவார்?

நாடுமுற் றும்கொடு நகரமே நிகர் எனக்
கேடுமுட்டிக்கிடக் கின்ற திக கீழமையில்
ஏடெத் தெழில்களின் இனிமையை மட்டுமே
பாடிவிட் டால் ஒரு பயனும் உண் டாகுமா?

ஆக்கிடும் அலுவலிங் களவிலா உள; பழுத்
தூக்குதற் கெமது சொற் துணைதரல் கடன்; ஒரு
நோக்கமற் றெழுதிடும் நூதனக் கவிதை பிற்
போக்கழித் தெருளப் புழுதியைக் கழுவுமோ?

மேத்துள கயமையின் மூலவேர் அறுபடப்
பார்த்தரல் பணி; வெறும் பழமையின் வழிகளில்
நாத்தழும் பேற நாள் முழுதையும் - நல மிலா
கோத்தவம் போக்கின் ஓர் கொள்கை முன்னேறுமா?

தச்சர்ஏர் தர, முனை கொல்லரே தர, நிலம்
பச்சையாக் கிடுபவர் பசியொழித் திட, நெடும்
உச்சிஏ றிப்புகழ்க் குறைவிடத் தடைய நாம்
கொச்சையே எனும்மொழிக் குப்பையோ டழுவதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாதேவி தசாங்கம்

### நாடு

கற்றோர் புகழ்கின்ற காமர் மணிக்கிளியே
பெற்று வளர்த்தாள் பெயருரையாய்-குற்றமிலாப்
பொன்னிலங்குந் தொன்மைப் புகழிலங்க நின்றதமிழ்த்.
தென்னிலங்கை நாடெனவே தேர்.

### நகர்

கிஞ்சுகவா யஞ்சுகமே கேடில் தமிழரசின்
விஞ்சு நகரம் விளம்புவாய் -எஞ்சாது
மங்குறவழ் சோலையொடு வான்கழனி தான் சூழத்
தங்குதிருக் கோணமலை தான்.

### மலை

அஞ்சொற் குதலைபொழி அஞ்சுகமே வெண்மதியும்
மஞ்சுந் தவழும் மலையுரையாய்-விஞ்சும்
பவமொழித் தேயெம்மைப் பாலிக்கு மாற்றாற்
சிவனொளி பாதச் சிலம்பு.

### ஆறு

வன்னப் பசுங்கிளியே வற்றாக் கருணையினால்
அன்ன முதவவரும் ஆறுரையாய்-மின்னும்
மணிசிந்திப் பொன்கொழித்து மாறாதெஞ் ஞான்றும்
அணிசிந்தா மாவலியா மாறு.

### பறை

சொல்லார் கிளியே தொடியேறு பூங்கையாள்
எல்லார் முரசம் இயம்பிடுவாய்- எல்லாரும்
நண்ணு முரிமை நலம்பேணி வாழ்கென்று
பண்ணும் சமட்டிப் பறை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொடி

மூவர் கொடி போல் முதன்மைக் கொடியுடையாள்
தேவி கொடிதேர்ந்து செப்பிடுவாய்-ஆவுக்கும்,
நீதியருள் எல்லாளன் நீண்மாட மேலெடுத்த
கோது தவிர் நந்திக் கொடி,

### தார்

பச்சைப் பசுங்கிளியே பாவேறுங் கீர்த்தியினாள்
மெச்சு தமிழ் மாலை விளம்புவாய்- இச்சகத்தில்
மாலைப்போ லோங்கி வரையாது தானல்கும்
தாலப் பெருந்தோட்டுத் தார்.

### யானை

சொன்மாலை பேசுஞ் சுகமே! எமதரசி
வன்மாலை கொண்டதனி வாரணமென்-வின் மாலை
மேவும் பகைவர் வியனரணம் தாமெறியும்
காவ லுரிமைக் களிறு.

### குதிரை

பொற்றுகளைச் சிந்துமலர்ப் பூங்காவிற் கிள்ளாய் நீ
பற்றலரை வெல்லும் பரியென்ன-முற்றுங்
குடிமைவழி நின்றே குலமானங் காக்கும்
அடிமையிலா ஆட்சிப் பரி.

### செங்கோல்

பாவிற் புகழ்மணக்கும் பைங்கிளியே நீராடைத்
தேவிக்கு வாய்த்த தனிச் செங்கோலென்-ஆவிக்குத்
தெள்ளமுதா யெங்கள் திருவாய்த் திகழ்கின்ற
வள்ளுவனார் தந்த மறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நினைவிலே!

இருள் கவிந் துலகைவீட்டுள்
இருத்திய வேளை!-இல்லைத்
திரையிட்டுத் தூக்கமென்னும்
சிறையுளே கிடத்தும் வேளை.
அரைமனம் உள்ளும்-மற்றும்
அரைமனம் வெளியே, வெள்ளம்
இரவிருள் நீக்கிச் செல்லும்
எழிலிலும் பதித்து நின்றேன்.
“விறைக்குதே! அம்மா,” என்ற
மெல்லிய முனகல் கேட்டேன்.
அறைக்குளே படுத்தால் என்ன?
அன்பினும் மென்மை நெஞ்சு
பொறுக்குமோ குளிரை? எங்கள்
பொன்குஞ்சு துயில் கலைந்து,
விறைக்கிற தென்கிறானே!
விரைந்திட்டேன் அவனை நோக்கி.
“போர்வையை இறுக்கிப் போர்த்தாற்
போதுமா, அம்மா?”- என்றான்
ஓர்கணம் வியந்தேன். பின்னும்
ஓர்நொடி; விளங்கிற்றுண்மை.
பார்வையை அன்பாய் ஆக்கிப் .
பக்கத்திற் படுத்துவிட்டேன்.
பேரிடி, மழைகள், எல்லாம்
பின்னரெம் நினைவில் இல்லை.
உள்ளத்தின் மூலை ஒன்றில்
ஊர்ந்த சிந்தனை களெல்லாம்
பிள்ளைச்செந் தளிர்க்கை தீண்டப்
பின் ஒதுங்கியன, தேய்ந்து.
கள்ளொத்த போதையொன்று
கவிந்ததென் நெஞ்சைமூடி,
அள்ளூற்றென் இதயம் வாழ்வின்
ஆனந்தத் தீம் பண் மாந்த.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லையோ கண்கள் இரண்டு

*நண்பர் படைப்பவையே நன்றென்பார்; ஏனையவை*
*பண்பற்ற செய்யுள், பழசென்பார்!- உண்பதிவர்*
*புல்லையோ? ஊத்தைப் பொதியோ சுமப்பதுவும்?*
*இல்லையோ கண்கள் இரண்டு?*

-"பண்டிதர்"

*பஞ்சடையும் கண்ணும் பசிக்கும் வயிறுமே*
*வஞ்சமிலா மாந்தர்தம் வாழ் வெனினும்-கொஞ்சமும்*
*அல்லலைக் காணா இலக்கியங்கள் ஆக்குவோர்க்*
*கிலலையோ கண்கள் இரண்டு!*

– "கதை-சிவன்"

*நாயை வளர்ப்பீர்! நடுத்தெருவில் நின்றிரந்து*
*வாயை நிரப்ப வழியறியார்-யாசிப்போர்*
*பல்லையே காட்டிப் படும் துயரம் பார்க்க உமக்*
*கில்லையோ கண்கள் இரண்டு!*

– சி. சின்னத்தம்பி.

*காதும் செவிடோ? கருங்கல்லோ நெஞ்சும்? உன்*
*பாதம் முடமோ, நீ பார்த்திடவும்-சோதிமணித்*
*தில்லையே நின்று செகமாட்டும் தெய்வமுனக்*
*கில்லையோ கண்கள் இரண்டு!*

– சோ. சண்முகபாரதி.

*நெஞ்சில் பசையில்லார், நீணோய் விலைக்களிப்பார்.*
*வஞ்சப் பொதுமகளிர் என்றறிந்தும்-கெஞ்சியவர்*
*வல்லை நிகர்த்த வனமுலைக்கே வீழ்வாருக்*
*கில்லையோ கண்கள் இரண்டு!*

– "செவ்வேள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னருமைத் தோழீ! எனது உள்ளம் நீங்காத
மன்னவரை நான் மறக்க மட்டேனால்! - பன்னிமிகச்
சொல்லி அழுதும் துயர்காணப் பெற்றோருக்
கில்லையோ கண்கள் இரண்டு!

– செ. வேலாயுதபிள்ளை.

செந்தமிழும் சிங்களமும் சீர்மேவும் ஈழத்தின்
சுந்தரம்சேர் கண்ணிரண் டென் றோராரே!- வெந்தழலும்
சொல் லையே பேசிமறம் சூழ்வார்! இவர்முகத்தில்
இல் லையோ கண்கள் இரண்டு!

– தமிழ் மகன்!

பன்மொழியும் பன் மதமும் பாரிற் பலவிடத்தும்
நன்மையுடன் நட்பாடல் நாம் கண்டோம் - கன் மனத்த
இல்லையே செந்தமிழுக் கிங் கிடமென் பார்! இவருக்
கில் லையோ கண்கள் இரண்டு!

–ச.அசோகன்.

ஒற்றுமையே வேண்டி உலகிற் பிறர் முயலச்
சிற்றிலங்கைத் தீவைச் சிதைத்திடுவார் - முற்றிருள்கூர்
அவளையே பட்டப் பகலென் றறையுமிவர்க்
கில் லையோ கண்கள் இரண்டு!

– ஆனந்தன்

பார்த்தவற்றைப் பார்த்தபடி பாட்டெழுத மாட்டாமல்
வார்த்தைகளைக் கொட்டி வளர்த்திமிகக் - கூத்தடிப்பீர்!
வல்ல கவிராய வாண, முகத் துமக்கென்
னில் லையோ கண்கள் இரண்டு!

– ஈழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்துப் பிறந்த சிசு

*தூங்கிக் கிடந்த துணைவி துயில் சிறிது*
*நீங்கி நெளிந்தாள்; நிமிர்ந்தாள், பின் - ஆங்கெனது*
*கன்னத்தை மெல்லக் கடித்தாள், கருங் கண்கள்*
*சொன்னத்தின் காதற் சுமைதாங்கா(து) - இன்பத்துப்*
*பாதை பிடித்துப் பழக்கம் வழிநடத்தப்*
*போதை மடுக்கப் புயலொன்றுள் - மோதி*
*விழுந்தோம். கிழக்குச் சிரிக்க வெறுப்போ*
*டெழுந்தோம், சிலமாதம் ஏக - முழந்தாள்*
*வலிவிழக்க, அன்னாள் வயிறும் புடைக்க,*
*முலைபழுக்க அன்று முயக்கின் - விலையறியா*
*தோடிக் களிப்புலகில் ஒன்றிப் புரண்டிட்ட*
*வேடிக்கை முற்றி வினையாச்சு! - நாடிக்கை*
*ஏக்க விழிகள், இமையா இமைஇணை,*
*துக்கம் வரண்ட துயரிரவு - நாட்களெனச்*
*செல்லுங்கால் எங்கள் சிறுகுடிலில் நாம் கடத்தும்*
*வில்லங்க வாழ்வில் விரும்பா அப் - பொல்லாங்கு*
*நேர்ந்தது காண்! இந்த நிலத்துச் சகதியிடை*
*மாய்ந்து மடிய மறுபடியும் - வாய்ந்ததொரு*
*பிள் ளை, அதுவோ பிறந்து குரல்கொடுக்க*
*வில்லை , எதற்காய்? ஏன்? ! என்றாளாம் - இல்லாள்; பின்*
*கத்தாத காரணத்தைக் கண்டாள், களிப்படைந்தாள்.*
*செத்துப் பிறந்த சிசு!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. வேலாயுத பிள்ளை.

# கொ டு ம ழை

பாதகம் கொலைஞனைப் பற்று தல்போல்
படர்ந்தது. கருமுகில் வானரங்கில்;
ஆதவன் ஒளிநடம் ஆடு தல்விட்
டகன் முகிற் திரையினுள் உடல்கரந்தான்;
காதலன் பழிமொழி கேட்டுள்ளம்
கருகிய கற்புடை மடமாதின்
கோதறு பலர்முகம் குழைவது போற்
"கும்"மெனத் திசைமுகம் இருண்டதுவே!

விடமுடை நாகமும் இடருற்று
விடரிடைத் தன தடல் அடக்கிடவே,
கடதடக் களிறுகள் பிளிறியடர்
காட்டினிற் பேரமர் புரிவனபோற்
படபட பட வென வானூடு
படுமுகிற் கணமிடி முழங்கின! அம்
மிடல்கெழு கரிகளின் கோடுகள் போல்
மின்னொளி விண்ணிடைத் துன்னியதே!

கடல் மடை திறந்தென விண்ணின்று
கடுமழை பொழிந்தது நெடுநேரம்;
இடருழந் துயிரினம் நடுங்கினவே;
இல்லிடை மக்களும் ஒடுங்கினரே;
தடமலை பெயர்த்திடும் கடுவிசையில்
தலையெடுத் தொருபுயல் ஆர்த்தது! அவ்
வடல் குறித் தெழுந்திடு புயலினிலே
அகப்படு மரங்களின் நிலையென்னே!

"ஓ"வென மதகிடை நீரோட,
ஓடிய நீரொடு பொருளோட,
ஆவினம கோழிகள் இறந்தோட,
அருமனைப் பொருள்களும் உருண்டோடச்.
சீவன மிழந்தவர் திகைத் தோடச்,
சிறுகுடில் அழிந்தவர் கவன்றோடச்,
"சோ"வெனச் சொரிந்தவம் மழைவிளைத்த
சேதம் என் சொல்லினில் அடங்காவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. சண்முகபாரதி.

# நீரிற் கொளுத்திய தீபம்

வந்துவிட் டாளம்மா வந்துவிட்டாள்-அந்த
வாவித் துறையினில் வந்து விட்டாள்
தந்துவிட் டாளம்மா தந்துவிட்டாள்-அன்பைத்
தரணி முழுதிற்குந் தந்துவிட்டாள்.

என்று மவளிங்கே பூத்திருப்பாள்-வானில்
ஏந்த லொருவனைக் காத்திருப்பாள்;
கொன்றிருட் கூட்டத்தை வென்றவனும் வரும்
கோலத்தை நின்றவள் பார்த்திருப்பாள்!

பாருக்குள் ளேயழகொன்று திரண்டந்தப்
பங்கய மாயுற் பவித்த தம்மா!
நீரிற்கொளுத்திய தீபமம்மா-நீள
நின்று நுடங்கிடுந் தாபமம்மா!

சந்தனப் பொட்டுத் தரித்திருப்பாள்-செய்ய
தாவணிப் பட்டைவிரித் திருப்பாள்;
அந்தரத் தேயவள் நோக்கமம்மா-அவள்
ஆகத்திலே அன்பின் வீக்கமம்மா!

வாசங்கள் பூசி வருவளம்மா-பல
வண்ணங்கள் பூசி வருவளம்மா.
பாசங்கொண் டேயவன் மீதினிலே-அன்புப்
பாணம் விடுப்பதைப் பாருமம்மா.

ஆயிரங் கைகளை நீட்டுவனே-அவன்
ஆசைத் துடிப்பினைக் கூட்டுவனே!
சேயிழை கன்னஞ் சிவந்திடுமே-இதில்
சிக்கி என் நெஞ்சம் உவந்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா.

புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா,

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தானென்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா.

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளில் போடும் அம்மா,

பாப்பா மலர்ப் பாட்டை நானும்
பாடி ஆடும் போது வாப்பா
இங்கே வாடா என்று
வாரிக் கொஞ்சும் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்புக்குப் பஞ்சமில்லை!

வேசிகளுக் குண்டோ
விருப்பென்று வீறாப்பாய்
காசினிக்குக் கவிபாடிக்
கண்ணியமாய் நடிப்பவரே!
ஒருவார்த்தை
ஆசையினை நிறுத்தி
அடிக்கணக்குப் பார்ப்பதுபோல்
வேசிகளின் நெஞ்சில்
விருப்பத்தை அளக்கின்றீர்,
கூசாமலே அதனைக்
கொட்டுகிறீர் பாட்டாக!
வாருமையா உமது
வாடிக்கை மறந்தீரோ?
காசுடனே கட்டிவந்த
கண்ணாட்டி கசக்குதென்று
மானமற்று என் மடியில்
மையல் சுவைக்க வந்து
போன மச்சான் இன்று
புதிதாகப் பேசுகிறீர்!
பேசும் ஐயா பேசும்!
தந்தை மகனென்றும்
தராதரமே பாராமல்
வந்தெம்மைக் கூடி
மகிழ்கின்றீர், போறீரே!
மறந்தே போய்விட்டீர்!
வேகின்ற உம்முடலின்
விருப்பினுக் கேற்றபடி
போகிக்க விட்டதெல்லாம்
பொய்யாகப் போச்சுதுவோ?
ஏனையா முளுசுகிறீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறையாய்த் தழுவுதற்கும்
ஆவல் தணிப்பதற்கும்
வெட்கமின்றி என் முலைக்கு
விழுந்தோடி வருவீரே!
அப்பவெல் லாம்உமது
அறிவை எங்கே பதுக்கிவைத்தீர்?
ஆசையினைக் காணாமல்
வேசியிடம் வருவீரா?
பேசுமையா!
காசுதந் தானாலும்
கணநேர மானாலும்,
வேசிமகள் மூட்டும்
விருப்பில் சுழித்தீரே!
காசினுக்கு இப்போது
கவிபாட வந்துவிட்டீர்!
தாசிமகள் என்றென்னைத்
தரணிக்குக் கூறிவிட்டீர்!
பாபச்சுமை யென்று
பழிச்சொல் பகர்ந்து விட்டீர்!
பேசுவதைப் பேசும்,
“பெரியவரே! உள்ளுக்கு
ஆசை இருந்தாலோ
அஞ்சாமல் வந்துவிடும்!
விருப்புக்குப் பஞ்சமில்லை,
வீணாக ஏன் வளர்ப்பான்...
வாருங்க சும்மா,
வழிஉமக்குப் பழசாச்சே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தே ன் மொ ழி"**

** நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுச் சின்னம் **

**நிர்வாக ஆசிரியர்:** *தி. ச. வரதராசன்.* **இணை ஆசிரியர் :** *'மஹாகவி'*

**அலுவலகம்:** *226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். இலங்கை*

**ஆண்டுக் கட்டணம்:** *ரூ. 3-00. தனிப்பிரதி 25 சதம்.*

**அச்சு:** *ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்,*

# புற இதழ்

* ஓசைப்படாமல் இருந்துகொண்டு மாற்றுயர்ந்த கவிதைகள் எழுதிவரும் தமிழ்நாட்டின் முதல் வரிசைக் கவிஞர் திரு. கலைவாணன் அவர்களின் படைப்பொன்று தேன்மொழியின் இந்த இதழைச் சிறப்பிக்கிறது. ஆடம்பரமற்ற ஆற்றொழுக்குப்போன்ற நடையில், தமிழ்மொழியின் இனிமையும் குழைவும் ஒருங்கே வெளிப்பட அழகாக எழுதும் அன்பர் கலைவாணனின் சொந்தப் பெயர் க. அப்புலிங்கம் என்பது. அவருடைய கவிதைத் தொகுதிகளாகிய "மனச் சிமிழ்", "நிவேதனம்" இரண்டும் அண்மையில் வெளியாகியுள்ளன. அவற்றைக் கவிதை அறிவோர் அவசியம் வாங்கிப்படிக்கவேண்டும். நேயர்கள் அவருடைய கவிதைகளையும் தேன்மொழி மூலம் இனிச் சுவைக்கலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

* எதிர்பாராத விதமாகத் தேன்மொழியின் இந்த இதழ் சற்றுத் தாமதமானதை அன்பர்கள் மன்னிக்க வேண்டுகிறோம். "தேன் மொழி எங்கே எங்கே" என்று ஆவலோடு அஞ்சல் எழுதி எம்மை மகிழ்வித்த அன்பர்களுக்கு எமது நன்றி.

* "அடிக்கரும்பு"தொடர் கவிதை இவ்விதழில் வெளியாக வில்லை; அடுத்த இதழில் தவறாது வரும்.

* பின்வரும் அடியை வைத்துக்கொண்டு அடுத்த வெண் பாவை யாத்தனுப்புங்கள்.

**எங்கெழிலென் ஞாயி றெமக்கு!**

**- ஆசிரியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்மொழி

திங்கள் வெளியீடு

யாழ்ப்பாணம். ஆனி,1956

## ப ய மி ல் லை !

இரவு விடித்தது கேளீர்
- தமிழ்
இளவள ஞாயி றெழுந்தது
- பாரீர்!
பரவுதற் கோடிநீர் வாரீர்
- வந்து
படிமின்கள் படிமின்கள்
பயமில்லைப் பாரீர்!

- நவாலியூர்ச்
சோமசுந்தரப் புலவர்

6

ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்சிறப்பு

*1*

கேளும், ஓய்!
ஆரென்று கேட்டு விட்டீர்!
அறைகின்றேன் செவி சாயும் !

ஆராரோ ஓரிரவில்
ஆசைக்குள் மாலாகிச்
சோராக் கலவியிலே
சுகம் காண நானுருவாய்
பாரினிலே வந்து விழப்
பார்த்துப் பயப்பட்டு,
கம்பத்துக் காலடியில்
கை கடக்க விட்டு விட்டுக்
கவியாய்க் கரைந்தழுத
கருவிலே திருவுடைய
கவிராசன் நானல்ல!

ஈசன் அடியெடுக்க
ஈற்றடியை நான் முடிக்கும்
ஆசி பெற்ற ராசியிலே
அவதரித்தோன் நானல்ல!

தம்பலத்தின் சாறுண்டு
தமிழ்க் கவியாய்த் துப்பிவிட்ட
அம்பலக் கவிராய
ஆசுகவி நானல்ல!

கமிசனுக்குக் கலை விலக்கும்
கணிகையரின் பஞ்சணையில்
நிமிஷங்கள் தவறாது
நேமநிட்டை செய் தவத்தால்
சுக்கான பொக்குவுடல்
சுருங்கத் தாதுவிழ
மெய்க் காதல் எல்லாம்
மேலோன் ஒருவன் மேல்
வைக்க, கவிதை வர,
வாடாத காமத்தைக்
கக்கித் தொலைக்கின்ற
கவிமகனும் நானல்ல!

*2*

நிதிவேட்டு நிதியேற்று
நீதம் மறந்து விட்டு
மதுக்குடித்த போதையிலே
மண்டியெழும் புதுக்கவியைப்
பிதுக்கி வெளித்தள்ளும்
பெரும் புலமைத்தனமெல்லாம்
எனக்குத் தெரியாது

*3*

நானும்
உம்மைப்போல் -
உள்ளிக்கும் உப்புக்கும்
ஒருவேளை
வெற்றிலைக்கும்
அள்ளிப் பருகி யுண
அரை வயிற்றுக் கஞ்சிக்கும்
நித்தம் உழைத்தலுத்தும்
நெஞ்சம் அலுக்காத்
மானிடன் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.

என்றாலும்
வேட்டை கிடைத்ததென்று
வேற்றுவரின் கூற்றுகளை
மூட்டோடு பேர்த்தெடுத்து
முதன் மூலம் என்று சொலி
ரோட்டுத் தவறாமல்
ரோந்து சுற்றி, தமுக்கடித்து,
பாட்டென்று, சாதிக்கும்
பகற் கொள்ளைக் கூட்டத்தை

சொத்தைக் கருத்துகளைச்
சொல்லில் திறனற்றுப்
பொத்திப் பொதிந்து
பொட்டணமாய்க் கட்டிவைத்து
பத்திரிகைச் சந்தையிலே
பரப்பி விலை கூவும்
பாசாங்குக்காரப்
பகல் வேடக் கூட்டத்தை

கற்பனையின் ஊற்றென்றும
கவியரசின் கூற்றென்றும்
பற்பிடித்துப் பார்த்துப்
பதம் பார்க்கும் ரசிகரென
விற்பன்ன வேடம்
விளைகின்ற கும்பலினை
திண்டுமிண்டு பண்ணாமல்
தீமை யின்னுமிழைக்காமல் -
ஒண்டி வாலொடுக்க.
ஊளைகளைத் தான் நிறுத்த,
கண்ட துண்டமாக்கிக்
கழுகுக் கிரையாக்கத்
தண்டெடுத்த மறக்குலத்துத்
தமிழன் நான்!

5.

வஞ்சனைகள், மாய்மாலம்
வகைத்தப்பு, வாயளப்பு
மிஞ்சிடினும் அன்னவரை
மேலோகம் தானேற்ற
நெஞ்சில் உரமுண்டு
நினைப்பில் திறமுண்டு!

ஆரென்று கேட்டதற்கு
அறைந்தேன்! மறக்காதீர்!
பேர் படைத்து, ஊற்றுப்
பேனாவும் கை படைத்து,
சீர்படைத்து உம் போன்றார்
சிரம் கொய்து சிதையேற்றி
நீர் தெளிக்கக் கவியெழுத
நிலத்தில் உதித்தவன் காண்!
நெஞ்சில் இதை நிறுத்தும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கா கி த வ ள் ள ம்

சின்னஞ் சிறு வயதில் சித்திரையாந் திங்களிலே .
வன்னக் கடதாசி வள்ளமொன்று செய்தேன்
நான் வாய்க்காலில் விட்டேனவ் வானத்தை நோக்கியே
"சாய்க்காதே வள்ளத்தைச்சாமி" யென்று கும்பிட்டேன்
காலைக் கதிரெழுந்து கரும்பனையின் வட்டுள்ளோர்
ஓலை மறைவில் ஒழித்திருந்து பார்த்ததுவே!
வண்ணக் கமலம் மலர்ந்து முறுவலிக்கப்,
பண்ணைப் பயிலாது பாவிசைக்க மண்டூகம்,
சின்ன மணிவள்ளந் தெளிந்தோடும் வாய்க்காலின்
தண்ணீரை வெட்டி வெட்டித் தத்தித் தலையசைத்தே
முன்னே படர்ந்தோடும், முட்டியங்கோர் வேர் தடுக்கப்
பின்னே தளர்ந்து நின்று பேதலித்து முன்னேறும்!
என் கண் குளிர்ந்ததுவே! யிதயமலர்ந் தேத்தியதே!
சென்னைக்குச் செல்கிறதிவ் வெண்செல் பவக் கப்ப லென்றேன்!
கண்ணூறோ, சாபக் கடுஞ்சொல்லோ கப்பலுக்கே,
விண்ணூரு மந்த வெயிலவனின் சூழ்ச்சியோ !
என்னே யிறைவா வெதுக்கிவ் விளையாட்டோ!
விண்ணின் முகட்டிருந்து வேகமெனு மூர்தியிலே
கண்ணைப் பிடுங்குமொரு காற்றடிக்க லாச்சுதம்மா!
சின்னஞ் சிறுகப்பல் சிதைந்து மறைந்ததம்மா!

***

கன்னற் கரும்பென்னக் கண்ணின் மணியென்னத்
தின்னத் தெவிட்டாத செந்தேனமுதென்னப்
பொன்னின் மலபென்னப் போற்றும் பொருளெல்லாம்
எண்ணும் கொடியினிலே யேதுக்கோ விரையாகி
மண்ணில் மடிகிறதே மாற்றமது காணீரோ!

– சோ. சண்முக பாரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன சூர்ப்பநகை வருகை

சிந்தையிடை வெந்துகனல் சீறியெழு வேகச்
சந்ததி யலைந்துபினெழுந்து வெளி யேகச்
சுந்தர மலர்ச்சுனை யிரண்டுசுழி யாகி
வந்ததென வந்தர மளந்தவகை கண்கள்

இத்திசையு மத்திசையு மெத்திசையு நோக்கும்
சித்தமதுன் மத்தமென மத்தென வலைக்கும்
கைத்தல மசைத்திடுபை சித்தம திசைக்கும்
எத்தியடி வைத்தகதி யித்தல மசைக்கும்

பங்கயமி ரண்டுவிரி யாதுபகை கொண்டே
மங்கல மணிக்கொடி யலைத்துமயல் செய்யும்
பொங்கிவரு மூச்சொடு புறம்பெயர்தல் செய்யா
தங்கவை முடைந்தவகை யெங்கணும் விளங்கும்

குந்தள மலர்க்குழல் குறைத்தகுறை கண்டால்
இந்தமகள் முந்தியொரு வெந்தசுர முற்றே
ஐந்துதர மைந்துபகல் ஆருயிர் பிழைத்து
வந்தன ளெனச்சொலும் வகைத்ததவள் குஞ்சி

காதிடை விளங்குவன கைவளைகள் போலும்
கையிடை விளங்குவன காலணிகள் போலும்
ஓதிடை விளங்குவன வொண்படிகம் போலும்
பேதுடைய திவ்வுடை பெயர்புடைவை பீடை

செந்தழ லெரிந்தெனச் சிவந்த வதரங்கள்
சிந்துர மழுந்துநகம் செங்கைவிரல் பொங்க
இந்துவில் வரும்புருவம் அஞ்சனம் விளங்க
சந்தையில் மருண்டதொரு நந்தியென வந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை மலர்ப்படு சுகந்தமென லாமோ
மெல்லிய மருத்தளிரின் மேன்மையென லாமோ
வல்லியவள் வந்தவகை சொல்லிவிட லாமோ
தொல்லையிரு வல்வினை தொடர்ந்ததென வந்தாள்

உள்ளியை யுரித்ததெனப் பல்வரிசை சொல்லும்
கல்லினை யுரித்தகனி மென்முறுவல் சொல்லும்
சொல்லுவதென் னில்லையென மெல்லிடைமெய்சொல்லும்
புல்லினை யசைத்தொழுகு வெள்ளமென வந்தாள்

பாலில்வரு மாவிபெறு கோலவுரு வாமோ
பாலைவரு கானலொரு பைந்தொடிய தாமோ
நூலில்வரு கற்பனை நுகர்ந்தநினை வாமோ
வாலையவள் வந்தவகை மாலையொளி யாமோ

ஏதுகடை ஏது பெயர் எங்கிவளனங்க
கேதுவிரி கோலவகை கொள்ளைவிலை கொண்டாள்
தீதில்வரு வாய்வயிறு செல்வதிலை யிந்தக்
கோதிலணி கொள்ளவொரு கோடிபணம் வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சா ந் தி ஏ து ?

தொட்டிலிட்டுத் தாலாட்டுப் பாடும் பெண்மை,
தொண்டுசெய்யும் செம்மல்களை ஆக்கும் பெண்மை,
கட்டிடஓர் துணிகிழிந்த கந்த லின்றி
கவலையிலே வாழ்வமைத்துத் தெருவோ ரத்தின்
திட்டியிலே பள்ளி கொண்டு கிடக்கக் கண்டேன் !
தினகரனின் கதிர்மலரக் கண்ம லர்ந்து
துட்டளிப்பீ ரையாவென் றிரந்து பிச்சைத்
தொழில் நடத்தும் சாந்திவழி அவளுக் கேது?

செருக்களத்தில் மருக்கொழுந்து போன்ற சேயின்
செங்கரத்தில் வாள் சேர்த்து வீரஞ் சேர்த்து
திருக்கரத்தால் உடையணிந்து சென்னி தொட்டு
சேர்த்திட்டா தமிழ்நாட்டின் மான மென்றே
உருப்படுத்தி வழியனுப்பும் தாய்க்கு லத்தார்
ஓடெடுக்கும் வாழ்வேனும் இன்றிச் சோற்றுப்
பருக்கைக்குப் பல்லிழித்து பெண்மை விற்றுப்
பிழைக்கின்றார் எனினுலகில் சாந்தி யேது?

–அண்ணல்

# அஞ்ச வேண்டாம்

வாட்டுபவர் வாட்டட்டும்! இலங்கை நாட்டில்
வாழ்வதற்கு விடமாட்டோ மென்று கூறி
ஓட்டுபவ ரோட்டட்டும்! தமிழை இந்த
உலகினுக்கே அவமானச் சின்ன மென்று
காட்டுபவர் காட்டட்டும்! கத்தி கொண்டு.
கழுத்தினையே வெட்டட்டும்! கவலை போக்கி
நாட்டிடுவோம் உன் புகழை அன்னையே! கேள்:
நாமிருக்கும் போதினில் நீ அஞ்ச வேண்டாம்!

–யுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ எங்கெழிலென் ஞாயிறெமக்கு”

*அள்ளிக் குடிக்கும் அமுதே! நல் ஆண்பனையின்*
*தெள்ளத் தெளிந்தசுவைத் தேன் துளியே! - வெள்ளையரே*
*பொங்கி எழு வீர்! எம் புலனே பறிபோயின்*
*எங்கெழிலென் ஞாயி றெமக்கு?*

– “காப்பியாற்றுங் காப்பியனார்”,

*காயும் வயிறோ கனல்வீசும் காயமெலாம்*
*நோயும் மிடியும் நொருக்கிடுமே; - பாயோடும்*
*இங்குழல் வோம்; எங்குமிருள்; ஈசா இஞ் ஞாலத்தில்*
*எங்கெழிலென் ஞாயி றெமக்கு?*

– சோ. சண்முகபாரதி

*உற்றார் வெறுத்தாலென்! ஊரார் ஒறுத்தாலென்?*
*மற்றோர்எம் நட்பை மறுத்தாலென்?- சற்றேனும்*
*மங்காப் பெருங்காதல் மாளிகையில் வாழுங்கால்*
*எங்கெழிலென் ஞாயி றெமக்கு?*

– மிரிசுவில் அரியரன்.

*உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கும் இருங்காதல்*
*வெள்ளந் தனில் மிதந்து செல்கின்றோம்! - பிள்ளைமதி*
*வெங்கனலே காவினுமென்? வேலைகரை மீறினுமென்?*
*எங்கெழிலென் ஞாயி றெமக்கு?*

– செ. வேலாயுதபிள்ளை

*கற்புக் கணிகலஞ்செய் கண்ணகி போலின்று*
*பொற்புடைய் மாதர் பொலிந்திடவே-நற்புவியில்*
*மங்கா ஒளிசிதறி வண்ணவழி தோன்றிடுமால்*
*எங்கெழிலென் ஞாயி றெமக்கு?*

– குறமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கு புகழ் செல்வம் தார மொடுசுற்றம்
மங்கு மெழிலும் மறைந்தாலும் - மங்காத
பொங்கெழிலார் மேனிப் புனித னருள் பெற்றால்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு?

– ராஜன்

வள்ளுவனார் தாம்வகுத்த வாய்மொழி நேர்நின் று
உள்ளும் புறமும் ஒருமையுற- கள்ளமொரீ,
எங்கள் வாழ் நாட்கள் இயலுமெனில் இவ்வுலகில்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு?

– பண்டிதர் கந்தையா

“ஓடுண் டிரக்க! ஒருசாண் துணியுண்டு!
நாடுண்டு நான் திரிய நானிலத்தில்! -- கேடுண்டோ ?
இங்கிடுவ தற்கும் இருக்கின்றார் மக்களெனில்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு?

–செவ்வேள்

சோறுண்டு நல்ல சுவைகொண்ட பாலுண்டு,
காருண் டிரண்டு ! நாம் காணாத - பேறுண்டோ ?
இங்கு பிறமக்க ளெக்கேடு கெட்டாலென்?
எங்கெழிலென் ஞாயி றெமக்கு ?

– சி. சின்னத்தம்பி

ஈழத்தில் வாழ இயலா தினித்தமிழென் -
றாழக் கடலுள் அமிழ்த்த அது - சூழினென்?
சிங்களத்தைக் கற்பீர்; சிறுபதவி வாய்க்குமேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு?

– பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம னை வி க் கு...

கானாற்றில் தேன்வெள்ளம் பெருக்கெடுத்துத்
கரும்பு நடு பாத்தியிலே பாயக், கட்டித்
தேனாக வந்துள்ள செங்க ரும்பின்
தீஞ்சுவைய அடிக்கரும்பே! எனது கண்ணே
வானாகும் வெற்றிடமாய் உலக மெல்லாம்
மாறினதோ? எனையன்றி மற்றோ ரெல்லாம்
போனாரோ வேறுலகம்? நீயில்லாமல்
பொய்யேதான் இவ்வுலகம்! ஒன்று மில்லை!

காலையிலே ஐந்தரைக்கு எனைஎ ழுப்பி,
"கண்ணத்தான் சிரியுங்கள்" என்பா யேஎன்
வேளையிலே - கவிஎழுதும் வீண்வே லை தான் -
வெறியோடு நானிருந்தால் வளைந்த தென்னை
ஓலையிலே தூங்குகிற பனிநீரைப் போல்
உன்பாட்டில் ஊமையாய் இருப்பா யன்றோ?
மாலையி லே புதியநிறம் பெறுவாய்!... பின்னர் ?....
மாட்டேன் நான் அதைச்சொல்ல மாட்டேன்,ஆமாம்?

சாகவில்லை; இருக்கின்றேன்! உன்னை எண்ணித்
தத்தளித்துத் தடுமாறும் எனது உள்ளம்
வேகவில்லை, நீயுள்ளே இருப்ப தாலே!
விளையாட்டுக் குணமென்னை விட்டு இன்னும்
போகவில்லை! எனக்குள்ளே பேசிப் பேசிப்
பொழுது தனைப் போக்குகிறேன்; வீட்டை விட்டு
ஏகவில்லை உன்னுருவம்! உன்சி ரிப்பு
எதிரொலித்து என்னுயிரை வாங்கு தம்மா!

அப்பாவும் அம்மாவும் உள்ளத் துள்ளே
அடைபட்டால் மட்டுந்தான் தெய்வம்; சும்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரி வைத்துநமை நச்சரித்தால்
உதறிவிடத் தானினைப்போம். ஆனால் நீயோ
எப்போதும் என்னெதிரில் இருந்து கொண்டு
ஏதேனும் உளறிக்கொண் டிருந்தால் கூட
எப்பாலும் பாழான இன்ப லோகம்
எம்முடனே இருக்கிறது! உண்மை தானே?

"காப்பி யொடு வரவேண்டும் அந்தக் கண்ணின்
கடையாலே எனைத்தொட்டு இழுக்க வேண்டும்
"சாப்பிடுங்கள்" எனச்சொல்லு முன்னே நெற்றி
தனில்கவிதை வளர்ந்து ஒளி வீச வேண்டும்
"மாப்பிளையும் பெண்ணுமாய்ச் சிறுவ ராக
மர நிழலில் இருந்தோமே, அந்தக் காட்சி
கூப்பிடுகின் றது என்னை அன்புக் கண்ணே !
குதித்தோடி வந்துவிடு ! சேர்ந்தி ருப்போம்!

கன்னத்தைக் கொண்டுவா.... அந்தச் சின்னக்
கைகளுக்கும் தருகின்றேன் ! உலகை உண்ண
முன்நெற்றி மீதெழுந்த இரும லர்க்கும்
மூச்சுவிடா மல் தருவேன் ! தமிழில் கொஞ்சும்
உன்னன்பு வாயெங்கே? அதிலே கொட்ட
ஓடிவரு வேன்கண்ணே ! பிரிவு போதும்!
என்னென்ன வேண்டுமோ தருவேன்! ஓடி
என்னிதயம் சேர்ந்துவிடு ! அன்பு, -"அத்தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரும்! எங்களுக்குள்ளே ஓர் மற்புரிந்து மாளுவோம்!

தமிழன் என்றொரு இனம் உண்டு
தனியே அவர்க்கொரு குணம் உண்டு.

– நாமக்கல் கவிஞர்.

ஒன்றுபட்டு வாழல்விட் டுருக்குலைந் தெமக்குளே
கொன்று கெட்டு வீழ்தலே குறித்துளோம்; இதல்லவோ
நன்று! மற்ற வர்கள் செய்யும் நாசவேலை, நல்லவை
என்றுவிட்டு நாம் இரைகள் ஆவதே சிறந்ததாம்.

இடதுகன்ன மீதில் அன்று யேசுசொன்ன மாதிரி
அடிதரப், பெருத்த இன்ப ஆழியின் முழுக்கினை
நெடிது துய்த்(து).எம் வலதுகன்னம் நீட்டுகின்ற கைகளின்
அடிபெறத் தரும் சிறப்பில் "ஆன்மசக்தி" உண்டடா!

தீமை செய்து, துன்புறுத்து கின்றவர் செயல்களுக்(கு)
"ஆம்" எனச் சிரங்கள் தம்மை ஆட்டுதல் உயர்ந்ததே!
நாம் எதிர்த்தல் விட் (டு) அவர்க்கு நன்மைகள் புரிந்திடல்
சேமவாழ்வு வாழவும் சிறந்தபாதை அல்லவோ!!

ஆகையால் என் அன்புடைத் தமிழ்ச்சகோதரா! அறி
வேகும் இன்னல் வாதையூடு வேதனைப் படும்பொழு (து)
"ஆகுமோ? அடுக்குமோ "? எனக்கனன் றெழுந்திடேல்
சாகவே வரின், அதைத் தடுக்கயாவர் வல்லவர்?

துச்சமாக எண்ணியே. துரும்பெனும் படிக்கெமை
"வைச்"செவர் நசுக்கினும், வருத்தியே பொசுக்கினும்
நச்செனும் படிக்கெமக் குளே பகைத் திருப்பதை
இச்சகத்தி லேஒழிக்க என்றுமே ஒருப்படோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் இற் றொழிந்துபோய் மடிந்துகெட்டுத் தீரினும்.
ஈனமிக் கிழிந்துயிர் சுமந்திருப்ப தாயினும்,
-ஏன்?- நமக்குளே வளர்ந் திருப்பதான பேதமே
மேன்மைமிக்கவாம்; அவற்றை விட்டொழிக்க ஒத்திடோம்!

மொழி இழந்து, கதி இழந்து, முதிருகின்ற பண்பெனும்
விழி இழந்து, விறல் இழந்து, விதிகடிந்த வாழ்வுடன்
இழிவின் ஒன்றி ஈழமீ திருப்பதே சிறப்பெனக்
குழியிலே விழுந்தபின்பு கூறி உள்ளம் தேறலாம்!

கெட்டுவீழும் எம்மினம் கிழிந்து பிய்ந்து, " பீத்தலாய்"
விட்டபின்னும் எம்முள் மொய்த்த வேற்றுமைகள் விட்டிடோம்
மட்டிலாத எங்கள் பண்பு மற்புரிந் திறந்திடல்;
எட்டிஎம்மை நாங்களே எதிர்த்துமாய்ந்து சாய்குவோம்!

வீரம்மிக்க வர்கள் நாம்; மிகுந்தமானம் உள்ளவர்;
தீரம்உற்ற வர்; செருச் சிறந்த எங்கள் ஆடலாம்.
காரம்மிக்க சொல்எறிந்து, கல்லை ஒத்த திண்மையீர்!
வாரும்! எங்களுக்குளேயொர் மற்புரிந்து மாளுவோம்!

நாங்களே நமைப்பகைத்து நாசம் ஆதல் அல்லவோ
ஓங்கும் எங்கள் நல்லினத்தின் உத்தமத் தனிக்குணம்!
"வாங்கள் "அத்தனிக்குணம் வளர்ப்பதே கடன் ; இதாற்
தீங்கிலாத சிங்களத்தின் சேவையாளர் ஆகலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப் பொங்கல்

பொங்கல் நாளின்று; பொழுது வழக்கம்போல்
எங்கும் புலர, எழுந்த இளம் பெண்கள் -
முற்றத்தைக் கூட்டி மெழுகி முழுகி வந்து
பற்றவைக் கின்றார் அடுப்பைப்; பலநாளாய்க்
கோடியிலே இந்தக் குதூகலநா ளுக்காகத்
தேடி ஒதுக்கிவைத்த தென்னையின் பாளை இதோ
மூண்டெரியும் போதுன் முகத்தையே பார்த்திருக்கும்
"காண்டை" விழிகளின்மேல் கண்ணைவிடாதென் அழகீ,
கட்டுவனில் சுட்ட களிமண் முழுப்பானை
இட்டுக் கறவை இறைத்த நறும்பாலை
ஊற்று; நெடுநாள் உழைப்பால் விளைவித்த
நாற்றுக் கொடுத்த நமது வயலரசி
ஒவ்வோர் மணியும் உதிரத் தொரு துளியாம்;
அவ்வா றிருக்க அதனையோ சிந்துவது;
மெல்லக் "கிளைந்து" மெது வாகப் பானையிலே
அள்ளி இடுபொன்னே! ஆலை நெரித்த
கரும்புச் சருக்கரையின் கட்டிகளைக் கொட்டு
விரும்பிச் சிறுவர் விலாப்புடைக்க உண்பதற்கே!
கொள்ளி விறகெடுத்துக் கொண்டோடும் சின்னவனைக்
கிள்ளுதற்குத் தேவை கிடையாது; தம்பீ, நீ
சீனத்து நன்மக்கள் செய்தனுப்பித் தந்தவெடி
வானத்தை மோதட்டும், வைத்துக் கொளுத்தி எறி!
சத்தமிட்டுக் காதுகளின் சவ்வை உடைத்திடும் உன்
வித்தைகளைக் காட்டி விளையாடு! வேலியிலே
ஒற்றை விழியை உணவின் மேல் வைத்தபடி
சற்றும் அசையாமல் தக்க தருணத்தைப்
பார்த்திருக்கும் அந்தப் பழைய விருந்தாளி
வேர்த்துப் பயந்து வெளி விண்ணில் பறந்தாலும்,
சாப்பாட்டு நேரம் சமையல் முடிந்ததுவும்
கூப்பிட்டால் பேச்சு: - கொளுத்து நீ உன் வெடியை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

இன்று புதுப்பொங்கல் ஆதலினால் என்னினிய
கன்றுகள் நன்று களிக்கத் தடையில்லை !
ஆழக் கிணற்றின் அடிச்சேற் றையும் இறைத்து
வாழாப் பயிரை வளர்க்கும் முயற்சியிலே
மூவர் தீலாவின் முழுநீ ளமும் மிதிக்கத்
தேவை! மீதி மீதத் தெள்ளமுதைப் பட்டையிலே
கோலிக் கயிற்றுக் கொடிகைப் பிடித்து வாய்க்
காலில் விட ஒருவர்! காய்ந்த நிலத் தூறிநீர்
போகும் வழிவழியே போக்குவிக்க மற்றொருவர்
ஆகும்! இவற்றை அடுக்கி முடியாது!
இந்தப் பழைய இறைப்பு முறை மறந்து
விந்தைப் புதுமை மிசின் பூட்டிப் பாய்ச்சுவதால்
ஒற்றைப் பரப்போ டுடலில் உயிர் முழுவதும்
வற்றி மடிகின்ற வாழ்வகன்றோம்! முன்னாளில்
வீட்டுக்குப் போதா திருந்த விளைவினை நாம்
கட்டிக்கொண் டோமே கொடுத்துண்ண லாகுமினி!
ஆதலினால் இன்றைக் கரும் பொங்கல் நம் நாட்டு
வேதனைகள் முற்றும் வெளியூருக் கோட
விடைகொடுத்து விட்டோம் விடிவின் இளங் காலை
அடியெடுத்துள் வைத்துளதால் ஆர்வம் மிகப் பொங்கும்
நேரம் இதடி ! நெடும் தேக்கும் விட்டெழுந்தே,
ஊரில் புதுப்பு திய உத்திகளைக் கையாண்டு,
கீரை பயிரிடவும், கிண்டி உழவல்ல
பார "இரும்பு" களைப் பாவித்து, நாட்டினரைக்
கொல்லும் பசியின் கொடுமை யொடு மிடிமை
வெல்லும் புதுநாளா விடிந்ததெனப் பொங்கம் நீ !
காட்டைத் தறித்துக் கதிர்கள் தலை தூக்கி
ஆற்றைத் திருப்பி அவைகளுக் கூட்டுவதும்,
இன்றைக்கு நம்மால் இயலுமடி ! இப்புதுமை

(மறு பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தே ன் மொ ழி"**

**** நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுச் சின்னம் ****

**நிர்வாக ஆசிரியர்:** *தி. ச. வரதராசன்.* **இணை ஆசிரியர் :** *'மஹாகவி'*

**அலுவலகம்:** *226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். இலங்கை*

**ஆண்டுக் கட்டணம்:** *ரூ. 3-00. தனிப்பிரதி 25 சதம்.*

**அச்சு:** *ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்,*

# புறஇதழ்

* "சாந்தி" என்ற பெயருடன் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் அருமையான மாத இதழின் ஆசிரியர் திரு ரகுநாதன் அவர்களை அறியாத தமிழ் வாசகர்கள் இருக்கமுடியாது. புதுமைப்பித்தனின் கதையை அழகாகத் தமிழுலகுக்கு எடுத்துக் கூறியுள்ள இவர் அருமையான சிறுகதைகளும், நல்ல நாவல்களும் எழுதியிருக்கிறார். அதோடு "திருச்சிற்றம்பலக் கவிராயர்" என்ற புனை பெயரில் கதைகளும் எழுதி வருகிறார். புதுச் சுவை தரும் அவருடைய கவிதைகளில் ஒன்று இவ்விதழை அலங்கரிக்கிறது.

* "உமாசுதன்" என்ற பெயருடன் ஒரு "வாசகக் கவிஞர்" எழுதியனுப்பிய பாட்டொன்று "தேன் மொழிக்"குப் பெரு மகிழ்வூட்டுகிறது. இப்படி அனேக நேயர்கள் தரும் வாழ்த்துக்கள் நமக்குப் பெருமிதத்தை உண்டாக்கு கின்றன. அவர் பாட்டு:

வள்ளுவன் தன்னை வளமார் இளங்கோவைத்
தள்ளரிய கம்பன் தனைக் கண்டேன் - உள்ளபடி
பாடுபுகழ்ப் பாரதியின் பாதையிலே செல்கின்ற
ஈடில்லாத் தேன்மொழியிலே!

* அடுத்த வெண்பாப் போட்டிக்கு நாம் ஒரு " அடி " யும் தர வில்லை நீங்களே முழுவதையும் எழுதிக்கொள்ளுங்கள். சென்ற 5-6-56-ல் கொழும்புமா நகரிலே தமிழ்ச் சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்ட கயமைத்தனத்தைக் குறித்து உங்கள் கருத்தை வெளிப்படுத்துங்கள். - **ஆசிரியர்கள்**

( முன் பக்கத் தொடர்ச்சி )

என்றைக்கும் குன்றா தெனச் சொல்லிப் பொங்கடியே! ........
பொங்கி அதோ பால் வழிகின் றது! "பொடியள்"
எங்கே? வரட்டும்! எடுக்கட்டும் தம்குரலை!
"பொங்கலோ பொங்கல"! "புதுப்பொங்கல்" ! என்றயவீ
டெங்குமே கேட்க எழுப்பட்டும் ஓசையை! என்
தோகை இளமையிலே உண்ணத் தொடங்குமுன்
காகத்தைக் கூவு! கதவைத் திறந்துவை!
உள்ளத்தில் கொள்ளா உவகையொடு பொங்கலினை
அள்ளிப் படை நீ அழகான மென்கரத்தால்
தேனும் தெவிட்டும் தெவிட்டா தடியே இன்
ரானந்தப் பொங்கல் அமுது!

**(இலங்கை வானொலித் தைப்பொங்கல் கவியரங்கில் பாடியது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் "தேன்மொழி"யின் முதல் இதழ் வெளிவந்தது. தேன்மொழியே ஈழத்தின் முதலாவது தமிழ்க் கவிதை இதழாகும். மஹாகவி, வரதர் ஆகிய இருவரும் சேர்ந்து சோமசுந்தரப் புலவரின் நினைவுச் சின்னமாகத் தேன் மொழியை வெளியிட்டனர். "கட்டிளமை செட்டுகின்ற கன்னிகையும் காதலனும் ஒன்று சேர்ந்தது போல எமது உள்ளத்திலே தோன்றிப் பேராவலாய் நிறைந்த இரு எண்ணங் களின் சேர்க்கைதான் இந்த இதழ். கவிதைகளை மாத்திரமே தாங்கிய ஒரு இதழை வெளிக்கொண்டு வரவேண்டும் என்பது மற்ற எண்ணம். நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்கு ஒரு நல்ல நினைவுச் சின்னம் உருவாக்க வேண்டும் என்பது மற்ற எண்ணம். இந்த இரண்டு எண்ணங்களும் சேர்ந்து தேன்மொழியை உருவாக்கி விட்டன." என்று முதலாவது இதழில் ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

தேன்மொழி பதினாறு பக்கங்கள் கொண்ட சிறு சஞ்சிகையாக மாதம் தோறும் வெளிவந்தது. ஒவ்வொரு இதழின் அட்டையிலும் சோமசுந்தரப் புலவரின் ஒரு பாடல் இடம் பெற்றது. "பத்து ஆண்டுகளின் முன் பாடிய செல்வங்கள்" என்ற ஒரு பகுதி தொடர்ந்து வந்தது. தேன்மொழி வெளிவந்த காலத்தில் பிரபலமாக இருந்த கவிஞர்கள் பத்து வருடங்களின் முன்பு அவர்களிற் பலர் எழுத ஆரம்பித்த காலத்தில் எழுதிய கவிதைகளில் ஒன்று அப்பகுதியில் இடம் பெற்றது. ஒவ்வோர் இதழின் பின் அட்டையிலும் சிறப்பாக ஒரு கவிஞர் அறிமுகப்படுத்தப்பட்டார். நாவற்குழியூர் நடராசன், சோ. நடராசன், அ.ந.கந்தசாமி முதலிய ஈழத்துக் கவிஞர்களும், ச.து.சு. யோகி, கலைவாணன், ரகுநாதன் முதலிய தமிழ் நாட்டுக் கவிஞர்களும் இப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டனர். ஈற்றடிகள் கொடுத்துத் தனி வெண்பாப் பாடத்தூண்டும் முயற்சியையும் தேன்மொழி மேற்கொண்டது. "வேசிக்கும் உண்டோ விருப்பு", "வீட்டிலே வைத்த விளக்கு", "இல்லையோ கண்கள் இரண்டு", "எங்கழியென் ஞாயிறெமக்கு" முதலிய ஈற்றடிகளைக் கொண்டு பலர் வெண்பாக்கள் எழுதினர். சில சீன, ஸ்பானிய, பிரான்சிய, ஆங்கிலக் கவிதைகளின் மொழி பெயர்ப்புக்களும் தழுவல்களும் தேன்மொழியில் வெளி வந்தன.

தேன் மொழியில் மொத்தம் ஆறு இதழ்களே வெளிவந்தன. முதல் நான்கு இதழ் களும் தொடர்ச்சியாக வந்தன. ஐந்தாம் இதழ் 56தை, மாசி மாதங்களுக்குச் சேர்த்து வந்தது. ஆறாவது இதழ் தட்டுத் தடுமாறி நான்கு மாதங்களுக்குப் பின் வெளிவந்தது. அதுவே தேன்மொழியின் கடைசிக்குரல். யாப்போசை கவிதையின் பிரதான அம்ச மாகக் கருதப்பட்ட காலம் அது. ஆயினும், ஆசிரியத் தலையங்கத்திற்கும், போட்டி அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கும் செய்யுளைக் கையாள்வதைத் தேன்மொழி தவிர்த்துக்கொண்டதுடன், தற்காலப் பொதுசன வழக்கைப் பெரிதும் ஒத்த மொழி நடையைக் கையாண்டுள்ளதையும் நாம் அவதானிக்கலாம்.

- பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்

NOOLAHAM FOUNDATION

ISBN 978-955-0958-33-7
9 789550 958337

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org